இந்தப் புது வரிகளைப் பற்றி மறுப்பு எடுத்துக்கூறப் படுமானால் "இந்த வரிகள் யாருக்குப் போட்டிருக்கிறோமோ அவர்கள் சார்பில் நீங்கள் வாதாடுகிறீர்கள்" என்ற தவறான கருத்தில் இந்த சபையின் சில உறுப்பினர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். இந்த வரிகள் யாருக்கு விதித்திருப்பதாகக் கூறுகிறீர்களோ, அவர்களை மட்டும் பாதிக்குமானால், அவர்களுடைய வருமானத்தை மட்டும் பாதிப்பதாக இருக்குமானால், இந்தவரிகளில் எதனையும் நான் எதிர்க்கமாட்டேன் என்னைச் சார்ந்தவர்களும் எதிர்க்கமாட்டார்கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்போது இந்த வரிகளை நாங்கள் எதிர்த்துரைப்பதை அவைகளுடைய விளைவு என்ன ஆகும் என்ற எண்ணத்தாலேயே.

லாரிகளுக்கும், பஸ்களுக்கும் அது ஓடுகிற தூரத்தையொட்டி அதில் ஏற்றப்படும் மக்களுடைய எண்ணிக்கையையொட்டி, விதித்துள்ள புது வரியின் மூலம் முதலாளிகளுடைய வருமானத்திலிருந்து ஒரு பகுதியை அரசாங்கத்திற்குக் கொண்டு வரும் ஆற்றல் இருக்குமானால், அதை மனமார வரவேற்கிறோம். ஆனால் வரிவிதிப்பின் விளைவாகக் கட்டணம் உயருமானால், சாமான்களுக்கு வாங்கப்படும் கூலி அதிகப்படுமானால், அதனுடைய விளைவு பொதுமக்களைப் பாதிக்கும் என்ற காரணத்தால்தான் பொதுமக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டாலும் அது இந்த நேரத்தில் தாங்கக் கூடியதல்ல என்ற காரணத்தால்தான்—பொதுமக்கள் எனும் போது உயர்தர நடுத்தர மக்களல்ல—கடை நிலையில் உள்ளவர்களை பாதிக்குமோ என்று ஐயுறும் காரணத்தால், இந்த வரிகளைச் சிந்தித்துத்தான் விதித்தீர்களா, அவர்களைப் பாதிக்காமல் இருக்க உறுதி கொடுப்பீர்களா என்று கேட்க வேண்டிய நிலையில் நாங்கள் இருக்கிறோம்.

அதே போல் மின்சாரக் கட்டணம் மிகப் பெரிய ஆலைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கு மட்டும் விதிக்கப்பட்டிருந்து அதனால் லட்சக்கணக்கில் அரசிற்கு வரி கொண்டு வந்து தருவதாக இருக்கும் என்றால், அதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. வீட்டு உபயோகத்துக்கு பயன்படும் மின்சாரக் கட்டணத்தின் மீது 10 சத விகிதம் அவர்களிடம் உபரி வரியாக அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய தனி கட்டணம் வசூலிக்கப்படும் என்பது மிகச் சாதாரண ஏழை மக்களையும், நடுத்தர மக்களையும்கூட நிச்சயம் பாதிக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்து, ஸ்டாம்பு கட்டணம் பற்றியோ அல்லது கிண்டி குதிரைப் பந்தயத்துக்குப் புதிதாக விதிக்கப்பட்டிருக்கும் வரியைப் பற்றியோ எங்களுக்கு மாறுபாடு இல்லை. ஆனால் ஸ்டாம்பு கட்டணம் உயர்வு பொதுமக்களுக்கு ஒரு தவறான நோக்கத்தை உண்டாக்குவதாக இருக்குமானால், அந்த நிலை ஏற்படாமலிருக்க என்ன செய்யலாம் என்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். தவறான வழியில் போய்த்தான் எல்லோரும் வாழ வேண்டும், பொய் சத்தியம்தான் ஓங்கும் என்ற எண்ணம் வளராமலிருக்க—அந்தத் தவறு வளராமலிருக்க—ஆலோசனை செய்து வழிவகை காணவேண்டும்.

குதிரைப் பந்தயத்தைப் பொறுத்த வரை, அதை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டு வருகிறோம். பெரும் மதிப்புக்குரிய பெரியவர்களுடைய வழியில் வந்தவர்கள்—உத்தமர் காந்தியார் வழியில் வந்தவர்கள் இன்றைய அமைச்சர்கள். இருந்தாலும்—குதிரைப் பந்தயத்தை நடத்தத் தான் செய்வோம். ஒழிக்கமாட்டோம். அந்த இனத்திலிருந்தும் வரி வாங்குவோம், என்று கூறுகிற முறையில் அதற்கான வரியை உயர்த்தி சிறிதளவு தொகையை எதிர்பார்க்கிறீர்கள். குதிரைப் பந்தயத்தால் நடக்கும் அக்கிரமம் இந்த ஆட்சியால் தடுக்க முடியாத அளவுக்கு தீமை பயக்கிறது என்று சொல்லிக்கொள்வேன். குதிரைப்பந்தயத்தில் சூதாட்டம் மட்டும் நடை பெற வில்லை. சூதினால் பல குடும்பங்கள் அழிவது மட்டுமல்ல. கள்ள மார்க்கெட்டில் ஈட்டிய ஏராளமான கருப்புப் பணம் இந்தக் குதிரைப் பந்தயம் மூலமாக முறைப்படி அவர் தம் கணக்கில் வரவு வைக்கப் படுவதற்கு இன்றைய பந்தயம் துணை செய்கிறது. எவருக்கோ 10,000, 20,000 தவறி பரிசு விழுந்துவிடுமானால், கருப்புப் பணம் வைத்திருப்பவர்கள் அந்தப் பரிசுபெற்ற டிக்கட்டைக் கையில் வைத்துக்கொண்டிருப்பவருக்கு 10,000, 20,000 என்னும் பரிசுத் தொகைக்குமேல் ஓரளவு இலாபத் தொகை சேர்த்துக் கொடுத்து விட்டு அந்த டிக்கெட்டைதாம் பெற்றுக்கொண்டு, தமது கருப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றுகிறார்கள். தவறான முறையில் நோட்டு அடிப்பவர்கள்கூட அந்த நோட்டைப் பயன் படுத்திக் கொண்டு அரசியல் தேர்தலில் ஈடுபடுவதைப் பார்க்கிறோம். அதேபோன்று கள்ளச்சந்தை கருப்புப் பணம் வெள்ளைப் பணமாவதற்கு ஒரு சந்தர்ப்பமாக இந்தக் குதிரைப் பந்தயம் பயன் படுகிறது. அப்படியிருந்தும் இதை ஒழித்துக் கட்டவில்லை என்றால், இன்றைய ஆட்சியாளர்கள் எதற்காகவோ, யாருக்காகவோ, ஏனோ அஞ்சுகிறார்கள்—தயங்குகிறார்கள்—என்று வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, நஞ்சை, புஞ்சை நிலத்திற்குத் தண்ணீர் தீர்வை உயர்த்தியிருக்கிறார்கள். அந்த வரி விதிப்பு ஏழைகளைப் பாதிக்காது என்று உறுதி அளிக்க வேண்டும். உண்மையாகவே ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களானால், அவர்களுக்கு இந்த வரியினின்றும் விலக்கு அளிக்க வேண்டும். இவ்வளவு தொகைக்கு மேற்பட்டு வரி செலுத்துகிறவர்கள்தான் இந்த

6th July 1962] [திரு. க. அன்பழகன்]

வரியைச் செலுத்த வேண்டுமென்று உறுதி கூற வேண்டும். இந்த அமைச்சர்கள் உச்ச வரம்பு கட்டுவதாகச் சொல்லி ஏழைகளைக் காப்பாற்றுவதாகச் சொல்லி, என்ன காரணத்தாலோ "ஏழைகள் தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று அவர்களை கை விட்டுவிட்டவர்கள் இப்போதேனும் இந்தப் புது வரி அவர்களைப் பாதிக்காது என்று உறுதி கூற வேண்டும்.

நேற்றைய தினம் பேசிய அங்கத்தினர் சிலர் கூறினார்கள்; "நஞ்சை நிலத்திற்கெல்லாம் மிகக் குறைந்த வரி விதிக்கப் பட்டிருந்தது. ஆகவே அதை அதிகப்படுத்துகிறோம்" என்று. நான் விசாரித்துப் பார்த்ததில் நஞ்சை முதல் தரத் திற்குத் தீர்வை ரூபாய் 25 அளவுக்கு இருந்து தண்ணீர் தீர்வையும் துணைவரிகளும் சேர்த்து ரூபாய் 45 ஆகி இப்போது இதன் புதிய வரியின் விளைவாக ரூபாய் 59 வரை ஆகும் என்று தெரிகிறது. நஞ்சை நிலம் அல்லது புஞ்சை நிலச் சொந்தக்காரர்களாக இருந்தாலும், லட்சக் கணக்கில் சேர்த்து வைத்திருப்பவர்களிடம், வருமானமுள்ளவர்களிடம் இந்த வரி வாங்கப்படுமானால் அது பாராட்டத்தக்கது. ஆனால் அதே நேரத்தில் குறைந்த அளவு நிலம் உடையவர்களைப் பாதிக்காம லிருக்க இந்த வரியினின்றும் விலக்களிக்க பாதுகாப்புத்தர அமைச்சர்கள் முன்வர வேண்டும். 5.00 p.m.

கரும்புக்கு செஸ் வரி போட்டிருக்கிறார்கள். இதனால் சர்க்கரை ஆலைத் தொழிலில் ஒரு முடக்கம் ஏற்படக்கூடிய அளவில் கரும்பு பயிரிடுவது குறைய நேரிடலாம். அது ஏற்படாமல் இருக்க வழி வகை தேடினால் இதற்கு மறுப்பு இல்லை. அது கரும்பு விவசாயி களைப் பாதிக்காமலிருக்குமா என்பதுதான் என்னுடைய கேள்வி. கரும்பு பயிரிடுவது நிற்காதவரையில் போடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட காரணத்தோடு நாங்கள் புதுவரிகளில் சில வற்றைக் கண்டித்தாலும் ஆளும் கட்சி சார்பில் சிலர் பேசும் போது எங்களை 'பஸ் முதலாளிகள் சார்பில் இவர்கள் வாதாடு கிறார்கள்' என்று குற்றம் சாட்டினார்கள். நாங்கள் பஸ்களைத் தேசியமயமாக்கி எடுத்து நடத்துங்கள் என்று சொல்லும்போது, எதற்காகவோ அதை அமைச்சர்கள் மறுத்துவிடுகிறார்கள். தேர் தல் நேரத்தில் முதலாளிகளுடைய பணம் எந்த அளவு உபயோகப் படுத்தப்பட்டது என்பது அனைவருக்கும் தெரியும். அந்த தொழி லைத் தேசியமயமாக்காமல் அதற்கு நாங்கள் வரி போடுகிறோம், இதை நீங்கள் எதிர்க்கிறீர்களே என்று இனியும் கேட்பார்களா னால், ஒருவேளை முதலாளிகளேதான் உங்களிடம் "வரி போடுவது போல போடுங்கள், நாங்கள் கண்டிப்பதுபோல கண்டிக்கிறோம் என்று ஆலோசனை கூறினார்களோ என்று எண்ணுகிறேன். நீங்க ளும் "பார், பார், நாங்கள் முதலாளிகளுக்கு புது வரி போட்டு வாட்டி வதைக்கிறோம்" என்று பேசி முதலாளிகளுக்கும் உங்க ளுக்கும் ஏதோ பகை இருப்பது போல் காட்டிக்கொள்வதுடன் எதிர்கட்சிக்காரர்கள் வாய் அடைத்துப் போவதற்காகவே முத லாளிக்குத்தானே வரிபோட்டிருக்கிறோம் என்று கூறுகிறீர்கள்.

[திரு. க. அன்பழகன்] [6th July 1962

முதலாளிகள் கொள்ளையைத் தடுக்கும் உண்மையான எண்ணமிருக்குமானுல் ரயில்வேத் துறை தனி குழுவாக இருந்து பணியாற்றினுலும் எப்படி மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கிறதோ அதே போல இந்த பஸ் தொழில் முழுவதையும் திறமையுள்ள மாநில அமைச்சர்கள் முறைப்படி ஏற்று நடத்துவார்களானுல் அதில் ஒரு ஆண்டுக்கு 10, 15 கோடி ரூபாய் லாபம் காணும் அளவுக்கு அதைச் செயல் படுத்த முடியும். அப்படிப்பட்ட பஸ் தொழிலைத் தேசிய மயமாக்க பின்வாங்குவது யாரை ஆதரிப்பதற்காக? ஆனுலும் அது இந்த நாட்டின் நல்வாழ்வுக்கு ஏற்றதல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

5-00 p.m. அடுத்து விலைவாசி ஏறுகிறது என்று என்போன்றவர்கள் எடுத்துச் சொல்லுகிறபோது, மிகவும் பொறுப்பும் கடமையுணர்ச்சியும் வாய்ந்த அமைச்சர் அவர்கள் சென்றமுறை மறுத்துரைத்தார்கள். நான் குறிப்பிடுகிற இந்தக் காலக்கட்டத்தில் விலைவாசி ஏற்றம் அதிகமில்லை. இது ஒரு விலைவாசி ஏற்றமல்ல என்று தெரிவித்தார்கள். நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது அந்த உயர்ந்த நிலையில் ஒப்பு நோக்கப்படும் புள்ளிவிவரங்கள் ஏழைக்கு விளங்காது. ஆனுல் பருப்பு, புளி, மிளகாய் விற்கிற விலை விவரத்தைச் சொன்னுல், அந்தப் புள்ளிவிவரம் மக்களுடைய வேதனைக்கு அடையாளம் என்பதை அமைச்சர் நம்புவார் என்று கருதுகிறேன். கடலை, பெங்கால்கிராம், எப்ரல் மாதம் ரூ. 44-க்கு விற்றது. இன்றைக்கு ரூபாய் 48. அதே கடலைபருப்பு எப்ரல் மாதம் ரூபாய் 50-க்கு விற்கப்பட்டது. இன்றைக்கு ரூபாய் 52. துவரை எப்ரல் மாதம் ரூபாய் 40-க்கு விற்றது. இன்றைக்கு ரூபாய் 49. துவரம்பருப்பு உடைத்தது எப்ரல் மாதம் ரூபாய் 56-க்கு விற்கப்பட்டது. இன்றைக்கு ரூபாய் 67-68 அதே போன்று பச்சைப்பயர் எப்ரல் மாதம் ரூபாய் 43-க்கு விற்கப்பட்டது. இன்றைக்கு ரூ. 48 பாசிப் பருப்பு எப்ரல் மாதம் ரூபாய் 57-க்கு விற்கப்பட்டது. இன்றைக்கு ரூபாய் 66-67 அளவாக இருக்கிறது. உளுந்து மூட்டை ரூ. 64-யாக இருந்தது. இன்று ரூ. 78 ஆக உள்ளது.

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : அங்கத்தினர் குறிப்பிடுவதெல்லாம் மூட்டையில் தானே (சிரிப்பு).

திரு. க. அன்பழகன் : என்ன கருத்தில் கேட்கிறீர்கள்? அமைச்சர் அவர்கள் என்னைக் கேலி செய்வதைவிட கேள்விக்கு விளக்கம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : நான் சொன்ன புள்ளிவிவரம் "வாழ்க்கைப் புள்ளி விவரப் பட்டியல்" **(Cost of Living Index)** யார் யார் எவ்வளவு சாப்பிடுகிருர்கள், அரிசி எவ்வளவு, பருப்பு எவ்வளவு என்று போட்டு அதற்கு வெயிட் இண்டக்ஸ் **(Weight Index)** போட்டு, அதன் பிறகு ஏறவில்லை என்று கணக்குக் கொடுத்தேன். மூட்டையின் விலை ஏறுகிறதென்ருல், அந்த ஏற்றம் மனிதனுடைய வாழ்க்கைச் செலவில் மிக மிக அற்பமான பகுதியாகும் **(Insignificant part)**. அந்த உயர்வு **Working Class Cost of Living Index** பாதிக்காது என்றேன்.

6th July 1962]

திரு. க. அன்பழகன்: அமைச்சர் அவர்கள் நான் இந்தப் புள்ளி விவரங்களைத் தருகிற காரணத்தால் மூட்டையில் வியாபாரம் செய்கிறேன் என்று கருதி, மூட்டையில் ஏற்படுகிற விலை ஏற்றம் ஏழைகளைப் பாதிக்காது என்று தெரிவிக்கின்றார். அமைச்சர் குறிப்பிடும் புள்ளி விவரமும் என்னிடம் இல்லாமலில்லை.

Working Class Cost of Living Index numbers applicable to employees under the Minimum Wages Act, 1948,

என்ற தலைப்பில் தரப்பட்டிருக்கிற புள்ளிவிவரம், ஜூலை 4-ம் தேதி வெளியிடப்பட்டுள்ள கெஜட்டில் உள்ளது இது. புள்ளிவிவரத்தில் கடலூரில் ஏப்ரல் மாதத்தில் 481-ஆக இருந்த புள்ளி மே மாதத்தில் 484-ஆக இருக்கிறது. திருச்சியில் 463-ஆக இருந்தது 467-ஆகியிருக்கிறது. மதுரையில் 474-ஆக இருந்தது 482-ஆகியிருக்கிறது. கோயம்புத்தூரில் 502-ஆக இருந்தது 512-ஆகியிருக்கிறது. நாகர்கோயிலில் மட்டும்தான் அந்த எண்ணிக்கை ஒரே அளவாக இருந்தது என்று புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது.

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: யுத்த காலத்திற்கு முன்னால் அதாவது 1938-39-ம் வருஷத்தை அடிப்படை வருஷமாக (Basic Year) வைத்துக்கொண்டு அதிலிருந்து 25 வருட காலம் எந்த அளவிற்கு அதிகமாக வளர்ந்திருக்கிறது என்று காட்டினோம். 4 புள்ளி ஏறிற்று என்றால் சென்ற வருடத்திலிருந்து நான்கு புள்ளி ஏறியிருக்கிறது என்று அர்த்தமல்ல.

SRI K. ANBAZHAGAN: The increase is in one month from April to May 1962.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I want to explain how the cost of living index for working people is prepared. It is based on the basic year, that is, 1939 as hundred. If it was hundred in 1939, today it is 484. If it was hundred in 1939, the next month it is 487. The increase of 3 points is in relation to the 1939 basic figure of 100 and not in relation to the figures of 1962.

திரு. க. அன்பழகன்: அமைச்சர் அவர்கள் தருகிற விளக்கத்தை என்னுடைய அறியாமையினால் புரிந்துகொள்ள முடியவில்லை. அடிப்படை 1939-ல் நூறாக இருக்கலாம். இந்த அடிப்படையை வைத்து ஏப்ரல் மாதத்தில் கணக்கு எடுக்கிறபோது நானூற்றி எண்பத்தி ஒன்று (481) என்று வருகிற புள்ளி மே மாதத்தில் 484 ஆகிறது. அடிப்படை அதுதான். மீட்டர் அதுதான் அளவுகோல் அதுதான். வேற்றுமையைக் காட்டவேண்டிய புள்ளி விவர அடிப்படை அந்த வேற்றுமையைக் காட்டாவிட்டால், புள்ளிவிவரத்தை தயாரிப்பதைவிட அவைகளைத் தீயிட்டுக் கொளுத்திவிடலாம். அப்படிப்பட்ட அரசாங்கப் புள்ளிவிவரம் யாருக்கும் தேவையில்லை. ஒரு மாதத்திற்கும் மற்றொரு மாதத்திற்கும் உள்ள விலை ஏற்றத்தைப் பற்றிய புள்ளி சேகரிப்பு கெஜட்டில் வருவது எதற்காக? அதை மாதாமாதம் அச்சிட்டு வழங்குவது எதற்காக? வாழ்க்கைப் புள்ளி, ஒரு புள்ளி ஏறினாலும் அது விலைவாசி ஏற்றத்தைக் காட்டுவது என்பதை யார் மறுக்க முடியும்? பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு கிராப் (Graph)

[திரு. க. அன்பழகன்] [6th July 1962

போட்டுக் காட்டுவார்கள். அதே போன்று கெஜட்டிலே வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வை விளக்கி படத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளனர். அது இதோ இந்த விலை ஏற்றத்தை கிராப் (graph) போட்டுக்காட்டியிருக்கும்போது அது விலைவாசி ஏறவில்லை என்ற வாதத்திற்கு எப்படிப் பயன்படும்? நேற்றைய தினம் ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் பேசுகிறபோது, "தொழிலாளியின் கூலி நான்கு மடங்கு உயர்ந்திருக்கிறது; அந்த நேரத்தில் விலைவாசி ஏற்றத்தால் தொழிலாளிகள் பாதிக்கப்படுவார்கள் என்கிறீர்களே, எப்படி பாதிக்கப்படுவார்கள்?" என்று கேட்டார். அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன். இதே நம்முடைய அமைச்சர் அவர்கள்தான் உழவர்களின் கூலி நிலை பற்றி சென்ற ஆண்டு சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்கள். **The average wages received by agricultural labourer per day calculated by the Madras Statistics Department are as follows :-** என்று தெரிவித்து *"1950-51-ல் ரூ. 1-28; 1956-57-ல் ரூ. 1-20; 1958-59-ல் ரூ. 1-24; 1959-60-ல் ரூ. 1-21; 1960-61-ல் ரூ. 127; ஆகவும் சராசரி கூலி இருந்தது என எடுத்துக் காட்டி 1950-51-ல் ரூ. 1-28 காசாக இருந்த உழவனின் கூலி 1960-61-ல் ரூ. 1-27-ஆகக் குறைந்துவிட்டது* என்றதற்கு 1950-51-ல் கருப்புச் சந்தை **Black market** இருந்தது. நாங்கள் கண்ட்ரோல் செய்யவில்லை. நியாயவிலைக்கடை திறக்கவில்லை. அப்போது அதிகக் கூலி வாங்கக்கூடிய நிலைமை இருந்தது; பின்னர் நியாய விலைக்கடை மூலமாக விலைகளைக் கட்டுப்படுத்திவிட்டோம். அதனால், கூலியும் குறைந்துபோய்விட்டது என்றார்கள். நான் 1950-51-ல் இருந்த கூலியைக் காட்டி அல்ல—மாறாக 1956-57-ல் ரூ. 1-20 காசாக இருந்த கூலி 1960-61-ல் ரூ. 1-27 ஆகத்தான் இருக்கிறது என்பதைக் காட்டியே கேட்கிறேன். இது அவர்களுடைய வருமானம் **income of agricultural labourer** என்று விவசாயத் தொழிலாளி பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதை நான் எதற்காக தெரிவிக்கிறேன் என்றால், சர்க்கார் நேரிடையாக அவர்களுக்குக் கூலி உயர்வு கொடுக்கவில்லை என்று குற்றம் சாட்டுவதற்காக அல்ல. கூலி உயர்வு இவ்வளவு குறைவாக இருக்கிற போது உண்மையில் கூலி உயர்வே இல்லாதபோது விலைவாசி ஏற்றத்தை அவர்கள் எப்படிச் சமாளிப்பார்கள்? என்பதற்காகத் தான் மேலும் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள், நம் நாட்டின் சராசரி வருமானம் **per capita income** எந்த அளவாக இருக்கிறது என்று கேட்டபோது, உழவுத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு குறைவாக இருப்பதாகத் தெரிவித்து, அதைவிட மிகக் குறைவாகக் கைத்தறி நெசவாளர்களுக்கு இருப்பதாகவும் தெரிவித்தார்கள். விவசாயத் தொழிலாளிக்கு ஆண்டுக்குச் சராசரி வருமானம் ரூ. 178 என்றும், அதே நேரத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு ரூபாய் 115 என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இது அவர்களுடைய பரிதாப நிலையை எடுத்துக்காட்டுவதற்குப் போதுமானதாகும். விலைவாசி எற்றத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஏழைமக்கள் துன்புறுவதற்கு மற்றொரு காரணம் ரூபாயின் மதிப்பு அளவுகடந்து சரிந்து கொண்டு வருவதுதான்.

6th July 1962] [திரு. க. அன்பழகன்]

ரூபாயின் மதிப்பு குறையவில்லை என்று இங்கே இருக்கிற அமைச்சர்கள் ஒருவேளை சொன்னாலும்கூட, மத்திய சர்க்காரி லிருக்கிற அமைச்சர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இன்றையதினம் இலாகா இல்லாத அமைச்சராக அதிகப் பொறுப்பு உடையவராக வீற்றிருக்கிற மத்திய அரசின் அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி இவ்வாறு தெரிவித் துள்ளார்கள், இந்திய சர்க்கார் கையாண்டுவருகிற வரி விதிப்பு கொள்கை காரணமாக ரூபாயின் மதிப்பு குறைந்து கொண்டு வருகிறது. நூற்றுக்கு 95 மக்கள் மிகத் தாழ்ந்த நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதிகமான செல்வம் குறிப்பாக சிலரிடம் போய் முடங்கிக்கொள்ளுகிறது. பணத்தின் மதிப்பு குறைகிறபோது ஏழை திண்டாடுகிறான், அதே நேரத்தில் பணக் காரனிடத்தில் பணம் குவிகிறது என்றும் தெரிவித்தார்கள். இதை ஒரு வேளை அவருடன் மாறுபட்ட கருத்துள்ள அமைச்ச ராக இருக்கிற திரு. மொரார்ஜி தேசாய் மறுத்தார்களா என்றால், அவரும் புள்ளி விவரத்தோடு ஒப்புக் கொண்டிருக்கிறார். இன்றைய தினம் ரூபாயின் மதிப்பில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டிருப்பது தவிர்க்க முடியாதது என்று நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் லோக் சபையில் குறிப்பிட்ட துடன் இருபத்தியொன்பது சதவிகிதம் ரூபாயின் மதிப்பில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. 1947-48-ஆம் ஆண்டில் ரூபாய் மதிப்பை இன்றைய மதிப்போடு ஒப்பு நோக்குகிறபோது, இன்றைய தினம் 29 சதவிகிதம் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்றார்கள். ரூபாயின் மதிப்பு குறைந்து விலைவாசி மேலும் ஏறி அதே நேரத்தில் தொழிலாளிக்கு வருமானம் உயரவில்லையென்றால், அந்த நிலைமையை அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். எனக்கு பதிலளிக்க எண்ணி உடனடியாக ரூபாய் மதிப்பு குறைந்ததால் விலைவாசி ஏறிற்று, அதைகூட ஒப்பிட்டுப் பார்க்க முடியவில்லையா என்று அமைச்சர் அவர்கள் கேட்கக்கூடும். 5-10 பி.ப. அவர்கள் படித்த பொருளாதார வித்தையை இனித்தான் நான் கற்றுக்கொள்ள வேண்டும். ஏழைகள் கூலி நியாயமாக உயர்த்தப் படாமலே, ரூபாய் மதிப்பு இறங்குகிறபோது நேற்றைய தினம் 1-¼ ரூபாய் கொடுத்து வாங்கிய பண்டங்களை இன்றைக்கு ஒன்றரை, இரண்டு ரூபாய்களுக்கு வாங்கமுடியாத நிலையில் நாளடைவில் விலைவாசியும் ஏறிக்கொண்டே போனால் அதனால் ஏற்படும் விளைவு என்ன என்பதை அமைச்சர் எண்ணிப்பார்த்துப் பதிலளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து இப்போது நிகழும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத் தில் முதலாண்டு நிறைவேறியிருக்கிறது. ஒரு ஆண்டு காலத்தில் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நமக்கெல்லாம் நம்பிக்கை அளிக்கும் வகையில் பலன் அளித்திருக்கிறதா என்று கேட்டால் இல்லை. இதில் ஐந்து சத விகிதம் தேசிய வருமானம் எதிர்பார்க்கப் பட்டது. மொத்தம் கிடைத்தது 3.5 சதவிகித அளவுக்குத்தான். எதிர்ப்பார்த்ததில் முக்கால் பங்குக்குத் தேசிய வருமானம்

[திரு. க. அன்பழகன்] [6th July 1962

கிடைத்திருக்கிறது. அடிப்படையாக உள்ள வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தியில் எதிர் பார்த்தது ஆறு சதவிகிதம். கிடைத்தது 1.6 சதவிகிதம். அதனால் எந்தப் பலனும் ஏற்பட்டு விடாது என்று குல்சாரிலால் நந்தா என்பவர் தெவித்திருக்கிறார். இதில் நம்முடைய அமைச்சரவைக்கு நேரடியான தொடர்பு இல்லையென்றாலும் பொதுவான வருமான நிலையைக் காட்டவே குறிப்பிடுகிறேன். ஒரு ஆண்டுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் கிடைக்காததால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மேலும் இரண்டு வழிகளிலிருந்து அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஒன்று நம்முடைய மாகாண சர்க்கார் விதிக்கின்ற வரிகள். மற்றொன்று மத்திய சர்க்கார் போடுகின்ற வரிகள். இந்தப் புதிய வரிகள் எல்லாம் சேர்ந்து விலைவாசி ஏறுகிறது. அதைக் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் என்ன வழி சொல்கிறீர்கள் என்று எங்களைத் திருப்பிக்கேட்கக்கூடும். என்ன பதில் சொல்ல முடியும்? அரசாங்கத்தில் இருக்கின்றவர்கள் நிர்வாகத்தை எவ்வளவு திறமையாக நடத்துகிறார்களோ அந்த அளவுக்கு சிக்கனமாகவும் அரசாங்கச் செலவு அமையும். அதனால் இப்போதைய வரிகள் பலவற்றைத் தவிர்க்கலாம். திட்டங்களை துவக்கியபின் காலந்தாழ்த்திக்கொண்டே போவதைத் தவிர்த்து பணம் வீணாகாமல் மிச்சப்படுத்தலாம். பொதுவாக உழவுத் தொழிலுக்கு, உணவு உற்பத்திக்கு இன்றியமையாத திட்டங்களில் இன்றைய தினம் நிர்வாகத்தினர் காட்டுகின்ற அக்கரையை விட இன்னும் அதிக அக்கரை எடுத்துக்கொள்ளவேண்டும். மதிப்பிற்குரிய அங்கத்தினர் ஒருவர் பேசும்போது, உரம் சரியான முறையில் வினியோகிக்கப்படவில்லை, காலாகாலத்தில் கொடுக்கப்படவில்லை என்று குற்றம் சாட்டினார்கள். காலம் தவறிக்கொடுக்கப்படுகிறது உரம். மேலும் காலம் தவறிக் கொடுக்கப்படுகின்ற உரம் கள்ள மார்கெட்டுக்குச் செல்கிறது என்று மூன்று நான்கு ஆண்டுகளாக குற்றம் சுமத்தப்படுகிறது. இந்த உர வினியோகத்தில் உள்ள குற்றங்கள் பலமுறை எடுத்துச்சொல்லப்பட்டும் அவை தவிர்க்கப்படவில்லை. இதனால் விளைச்சல் பாழ்படுகிறது. மேலும் வெள்ளத்தால் பாழ்படுகிற பகுதிகளைப் புனரமைப்பு செய்வதில் கூட அரசாங்கம் எல்லாப் பகுதியிலும் அக்கரை காட்டுவதில்லை. சென்ற ஆண்டு சேலம் மாவட்டத்தில் வெற்றிலைக் கொடிக்கால் பாழ்பட்டது. பாண்டமங்கலம், பொத்தனூர் போன்ற பகுதிகளில் பாதிக்கப்பட்ட கொடிக்கால்கள் பல. அங்கு வெற்றிலைக் கொடிக்கால் பயிர் செய்பவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டி அரசாங்கத்தினிடம் முறையிட்டும் ஏனோ முன்வரவில்லை. பயிர்களைப் பூச்சி அரிக்கிற நிலை ஏற்படுகிறபோது, விவசாய இலாகா போதுமான அளவு மருந்தளிக்க, விலையைக் குறைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. இவைகளில் குறைநீக்கி, விரைந்து செயல்படுத்தினால் ஓரளவு உணவு உற்பத்தி பெருக்கம் ஏற்படும். அடுத்து, விலைவாசியைக் கட்டுப்படுத்த என்று விவசாயிகளிடத்தில் இருந்து உணவுப்பொருள்களை வாங்கிச் சேர்த்துவைத்து விலை அதிகமாகும்போது அதை விற்று அதன் மூலம் பலர் கொள்ளை

6th July 1962] [திரு. க. அன்பழகன்]

லாபம் பெறுகிறார்கள். ஆகையால் கூடுமானவரையில் விவசாயப் பொருள்களை அறுவடை சமயத்தில் அரசாங்கத்தின் சார்பில் கூட்டுறவு முறையிலாவது வாங்கிச் சேர்த்துவைக்கவேண்டும். உணவுப்பொருள்கள் இவ்வளவுதான் அதிகப்படியான விலை விற்க வேண்டுமென்று விலையைக் கட்டுப்படுத்தவேண்டும். நெருக்கடி வரும்போது அரசாங்கம் தம்மிடமுள்ள சேர்த்து வைத்த பொருள் களை அந்த விலைக்கே விற்கச் செய்யவேண்டும். அப்போதுதான் விலை ஏறுகிறபோது இவ்வளவுக்கு மேல் விற்க யாருக்கும் உரிமை யில்லை என்று தடுக்கமுடியும். பயிர் அறுவடை செய்யும் காலத் தில், அரசாங்கம் விலை நிர்ணயிக்கும் வாய்ப்பு இருக்குமானால், மற்றவர்களும் குறிப்பிட்ட விலையில் விற்று அதற்கேற்ற லாபம் சம்பாதிக்கலாமே தவிர, ஏராளமான பணத்தைச் சம்பாதிக்க இடமில்லாமல் இருக்கும். விவசாயப்பொருள்கள் வீணாக விலை யேறாமல் இருக்கும். விவசாயப்பொருள்கள் உற்பத்தி பாதிக்கப் படுவதும் கூடுமான வரையில், அரிசி போன்றவை போதுமான அளவு இல்லாமல் இருக்கும்போது, மத்திய சர்க்காரை இணங்கச் செய்து விலையேறாமல் செய்ய, தேவையான அளவு வெளிநாட்டு அரிசியைத் தேவைக்குத் தகுந்த அளவு பெற்று அவற்றைத் தேவைப்படும் நேரத்தில் மக்களுக்குக் கொடுக்க முன் வர வேண்டும். இப்படிப்பட்ட பல முயற்சியாலும் இந்த விலைவாசி ஏற்றத்திலிருந்து நாட்டு மக்களை விடுவிப்பதற்கு முதலில் வழி செய்யவேண்டும். அதற்கு மாறாக விலைவாசி ஏற்றத்தை எதிர்ப் பவர்களை பார்த்து இவர்கள் எல்லாம் விலைவாசி ஏற்றத்தை எதிர்த் துக் கூச்சல் போடுவதால் விலைவாசி இறங்கிவிட்டதா என் பதில் பயனில்லை. ஒருவேளை திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ளவர்கள் ஆற்றலற்றவர்கள், கிளர்ச்சி நடத்துவதற்கு அவர் களால் முடியுமா, ஆற்றல் இருக்கிறதா என்று அமைச்சர்கள் கேட் பதாகத்தான் இதை நான் எடுத்துக்கொள்வேனே தவிர, விலைவாசி ஏற்றம் நியாயமானது கிளர்ச்சிதான் தவறு என்று மக்கள் ஏற்றுக் கொள்வதாக நான் நினைக்கமுடியாது. மேலும் விவசாயிகள் ஒரு நிலையான வருமானத்தையடைய ஏதுவாக பயிர் இன்ஸ்யூரன்ஸ் திட்டம் விரைவில் விவசாயிகளிடத்தில் பரவுகிறதோ அந்த அள வுக்கு அவர்கள் அதனால் அவர்கள் பயன் பெறுவர். அது விவ சாயத்திற்கு நல்ல முறையில் துணை நிற்கும்.

நீர் ஊற்றுக் குழாய்கள் (Artesian Wells) எவ்வளவு ஏற்படுத்தப்படும் என்ற எண்ணிக்கையைத் தெரிவித்திருக்கிறார் கள். வரவேற்கிறேன். இன்னும் தமிழ் நாட்டில் எவ்வளவோ பகுதிகளில் ஏற்படுத்த முடியும். அதற்காக ஒதுக்கியிருக்கிற தொகை போதாது. எத்தனையோ பகுதி, நிலத்திற்கடியில் நீரோட்டமுள்ள பகுதிகள் ஊற்றுக் குழாய்கள் இல்லாமல் வீணா கின்றன. அரசாங்கத்தின் செலவில் அவற்றை ஏற்படுத்தி, அமைச்சர் அவர்கள் தெரிவித்திருப்பதுபோல், அந்தப்பாசனத் திற்கு வேண்டுமென்றால் வரி விதிக்கலாம். விவசாயிகளாகவே அதை வைத்துக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது.

இன்றைய தினம் உணவு உற்பத்தியுடன் ஒட்டியிருக்கிற ஒன்று மீன் உற்பத்தி. அரசாங்கத்தில் அதற்காக அதிகத் தொகையை

ஒதுக்கியிருக்கிருர்கள். இன்னும் மீன் உற்பத்தியைப் பெருக்க வழிமுறைகள் சரியான அளவு ஏற்படவில்லை. பல குறைகள் ஏற்படுகின்றன. முக்கியமாக சென்ற ஆண்டு இந்த மீன் இலாகாவை ஆராய அமைக்கப்பட்ட நிர்வாகத்தை பரிசீலித்த மதிப்பீட்டுக் குழுவினர் பல உண்மையான ஆய்வுக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிருர்கள். அப்படி தெரிவித்த கருத்துக்களில் ஒன்று மீன் வலைக்காக வாங்கப்படும் நைலான் நூலும் மற்றவைகளும் பெதுவாகப் போய்ச் சேரவேண்டியவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை என்பதாகும். அவர்கள் தந்துள்ள குறிப்பு:—

'The Committee understands that the cotton yarn and nylon yarn, etc., given to the co-operative societies for being distributed among the fishermen did not reach all the fishermen and there seem to be some loopholes and that these items are taken away by the influential directors who are in charge of the co-operative societies. This may not be the case with every co-operative society but there seem to be every possibility of misuse of the aid given by the Government. The Committee recognises that this has to be thoroughly examined and loopholes in this regard plugged so that the benefit really goes to those for whom it is intended.

இதனை மிக முக்கியமான கருத்தாக நான் கருதுகிறேன். இந்தக் குறைபாடு இருக்கிற வரையில் எந்த நியாயமான பலனும் ஏற்படாது. அதேபோல இந்த மதிப்பீட்டுக் குழுவினர் வேறு பல கருத்துக்களையும் தெரிவித்திருக்கிருர்கள். அதில் ஒன்று, அழுகி கெட்டுப்போன மீன், பயன் படுத்திய பின் மிச்சமாகி எறியப்பட்ட மீன் இவற்றைச் சேர்த்து அதன் மூலம் மீன் உரம் உண்டாக்க வேண்டுமென்பது. மீன் உரம் எவ்வளவு தூரம் பயன் படக்கூடியது என்று இங்கே பேசிய பல அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னுர்கள்ஆகையால் அது மீன் இலாகாவின் வருமானத்திற்கு ஏற்றதாயும், உணவு உற்பத்திக்குப் பயன் தரத்தக்கதாயும் இருக்குமென்பதால், அதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்த அரசாங்கம் மிக முக்கியமான கல்விப் பிரச்சனையில் புதுக் கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிருர்கள். கல்வியைப் பொருத்தவரையில், சில வார்த்தைகள் கூறி, அந்த அளவில் என் உரையை முடித்துக்கொண்டால்தான், இப்போது எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற காலம் போதுமானதாக இருக்குமென்று கருதுகிறேன். கல்வித்துறையில் மறுபடியும் சீர்திருத்தம் செய்வதற்கு முன் நன்ருக சிந்தித்து, அத்துறையில் உள்ளவர்களைக் கலந்து ஆலோசித்து நல்ல முடிவுக்கு வர வேண்டும். அதற்குச் சற்று காலம் வேண்டும். ஆனுல் இன்றைக்கு உடனடியாகக் கவனிக்கப்படவேண்டிய பிரச்சனையாக இருப்பது மாணவர்கள் பலர் பள்ளிக்கூடங்களில் சேர முடியாமல் திண்டாடுகின்ற நிலைமை இது ஆரம்பப் பள்ளியில் இருந்து தொடங்கியிருக்கிறது. நான் கேள்விப்பட்டேன், அமைச்சர்களிடத்தில்கூட ஆரம்பப்பள்ளியில் சேர்க்க முறையிட்டுக் கொண்டதாக. என்னுடைய பிள்ளையை ஆருவது வகுப்பில் சேர்க்கவே தலைமை

6th July 1962] [திரு. க. அன்பழகன்]

ஆசிரியரைப் பார்க்க வேண்டியிருந்தது. பொதுமக்களுக்கு மிக நெருக்கடியான நிலைமை பிள்ளைகளைச் சேர்ப்பதில் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையைத் தவிர்க்க சரியான வழிமுறைகளைக் காணவேண்டும். அதிகமான பள்ளிகள் ஏற்படுவதைப் பார்க்கிறோம். ஆயினும் அவை போதுமானதாக இல்லை.

அடுத்து ஆசிரியர்களுக்குத் தரப்படுகின்ற பென்ஷன் ஓய்வு பெற்றதற்கு பின் தரப்படுகின்ற ஊதியம் மிகக்குறைவாக இருக்கின்றது. ஹையர்கிரேடு ஆசிரியர்களுக்கு ரூ. 11—12—13 என்ற அளவில் பென்ஷன் கிடைக்கிறது. அவர்களுக்குக் குறைந்தது 20 ரூபாயாவது கிடைக்குமளவில் அவர்கள் கடைசி காலத்தில் பெறுகின்ற சம்பளத்தில் பாதியாவது பெறுகின்ற வழியில் பென்ஷன் அளிக்கப்படவேண்டும். செகண்டரி கிரேடு ஆசிரியர் பெறுவதும் குறைவாக இருக்கிறது. அவர்கட்கு ரூ. 30 அளவாவது ஓய்வு கால ஊதியம் அளிக்கவேண்டும். எல்.டி., ஆசிரியர்கள் கல்லூரிகளில், உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றுகின்றவர்கள் பெறுகின்ற பென்ஷன் தொகையும் குறைவாக இருக்கிறது என்று ஆசிரியர்கள் சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

அவர்கள் சம்பளத்தில் நான்கில் ஒருபங்காவது, அவர்கள் கடைசிக்காலத்தில் பெறும் ஊதியத்தில் 25 சத விகிதமாவது பென்ஷன் கொடுக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவற்றைக் கவனிக்கவேண்டும். அதே மாதிரி ஆசிரியர்கள் 60 வயது தொடர்ந்து பணியாற்றினால், மாணவர்களுக்கு நல்லதே தவிர எந்தவகையிலும் மாணவர்களுக்குக் கேடு ஆகாது. 55 வயது நிரம்பியவர்களையெல்லாம் வீட்டுக்குப் போங்கள் என்று வற்புறுத்துவது அவ்வளவு நல்லதல்ல. கல்லூரி நிர்வாகிகள் விரும்பினால், அவர்களைப் பணியில் 60 வயது வரை வைத்துக்கொள்ளலாம் என்று நிர்வாகிகள் விருப்பத்திற்கு விடுவதைவிட 60 வயது வரை ஆசிரியர்கள் அனைவரும் பணியாற்றுவதற்கான உரிமை அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 5-20 p.m.

அதற்கடுத்து, நான் தெரிவிக்க விரும்புவது என்.ஜி.ஓ.-க்களில் ரூபாய் 150-க்கு கீழ் ஊதியம் பெறுகிறவர்களுக்கு 5 ரூபாய் பஞ்சப் படி அதிகப்படுத்தி இருக்கிறீர்கள். இந்தத் தொகையும் பஞ்சத்தில் அடிப்பட்டு 5 ரூபாயுடன் நின்று விட்டது. எனவே ரூபாய் முன்னூறு வரை ஊதியம் பெறுகிறவர்களுக்கு இந்த ஐந்து ரூபாயை நீட்டுவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். மேலும் மத்திய அரசாங்கத்தில் 10 ரூபாய் அளவு கொடுத்திருக்கும் போது நாம் மட்டும் 5 ரூபாய் கொடுக்கிறோமே என்று நினைத்து "நீங்கள் எப்படி 10 ரூபாய் கொடுத்தீர்களோ, அதே மாதிரி நாங்களும் எங்கள் சிப்பந்திகளுக்கு உயர்வு கொடுக்க வேண்டியிருப்பதால் அதற்கு பஞ்சப்படி உதவித் தொகை அளிக்க வேண்டுமென மத்திய அரசிடத்தில்" வற்புறுத்திக் கேட்க வேண்டும். அவர்களுடைய பட்ஜெட் வரவு செலவுத் திட்டம் ஆயிரம் கோடி அளவில் ஓடும். அது முதலாளியுடைய பட்ஜெட் என்றால் இது மாநில அரசினுடையது. இது மானேஜருடைய பட்ஜெட் என்பதே பொருந்தும். மத்திய மாநில அரசாங்க ஊழியரிடையே பஞ்சப்படியில் வேற்றுமை இருப்பது நல்லதல்ல.

மேலும் விலைவாசி ஏற்றத்தாழ்வுகளைச் சரிக்கட்ட மாநில அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் இந்தப் படியினைக் கொடுக்கவேண்டும்.

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இந்தப் பஞ்சப்படி அளிக்கப் படவில்லை என்பது வருந்தத் தக்கது. அவர்களுக்கு அளிக்கும் ஊதியமே குறைவு.

அவர்கள் ஆற்றும் பணி மகத்தானது. கிராம உத்தியோகஸ் தர்களுக்கு மேலும் குறைவு ஏற்படுத்தாமல் அவர்களுக்கும் இந்தப் பஞ்சப்படித் தொகையை உடனடியாக அளிப்பதற்கு இந்த அரசாங்கம் முன் வரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய வேண்டுகோளை ஓரளவு சிந்தித்துப்பார்த்து, இப் போது ஏற்பட்டிருக்கும் விலைவாசி ஏற்றத்தைக் குறைக்க வழி இல்லையா, போட்டிருக்கும் வரிகள் விலைவாசி ஏற்றத்திற்கு மேலும் வழி செய்யாதா என்று கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. என். நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: சேர்மன் அவர்களே, இந்த பட்ஜெட்டின் பொது விவாதத்தில் நானும் ஒரு சில விஷயங்களைப் பற்றி கனம் அங்கத்தினர்களுக்கு ஒரு சில குறிப்புகளுக்குப் பதில் சொல்லும் முறையில் என் இலாகாவைப் பற்றிப் பேச விரும்புகிறேன். என்னுடைய இலாகா —கூட்டுறவு, மீன் வளம், காட்டிலாகா. இந்த மூன்றுக்கும் இரு சபைகளிலும் கனம் அங்கத்தினர்கள் நல்ல விஷயங்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, ஒரு சில விஷயங்களுக்குப் பதில் கூற விரும்புகிறேன். விரிவாகச் சொல்லவேண்டிய வேலை கனம் நிதி அமைச்சர் அவர்களைச் சார்ந்தது. குறைந்த நேரம் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் கனம் நிதியமைச்சரவர்கள் உங்களுடைய இலாகாவைப் பொறுத்தவரை, நீங்கள் பேசவேண்டுமென்று பணித்தார்கள். முதலில் மீன் வளர்ப்பு பற்றி ஒரு சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

SRI S. JAYARAMA REDDIAR : I would like to know, Sir, why the Hon. Minister for Co-operation is now intervening in this debate. We would like to be enlightened.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, it is the privilege of a Minister to intervene in the Debate at any time the Minister thinks it is necessary and no point of order can be raised on this matter.

SRI S. JAYARAMA REDDIAR : I have not raised a point of order, Sir. I would like to be enlightened why the Hon. Minister be intervening now in the Debate.

MR. CHAIRMAN : The hon. Member should wait and see and he will understand.

கனம் திரு. என். நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: இன்று அந்த சபையில்கூட மீன் இலாகாவைப் பற்றிச் சொன்னேன். முக்கியமாக நைலான் வலைபற்றி எனக்கு

[திரு. என். நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்]
6th July 1962]

முன்பு பேசிய கனம் அங்கத்தினரவர்கள் பேசினார்கள். கொடுத்த வரையில் அது நல்ல முறையில் வினியோகம் செய்யப்பட்டிருக்கிறது. இதைச் சொல்லும்போது அநேகமாக மெம்பர்கள் ஆச்சரியப்படக் கூடும். சில இடங்களில் நைலான் வலை வேண்டாமென்று சொல்லும் மீனவர்கள் கூட இருக்கிறார்கள். அது நண்பர் முத்துக்கண்ணப்பன் அவர்களுக்கும் தெரியும். நைலான் வலை கொடுத்து அவர்களுக்கு மீன் நிறையக் கிடைத்தாலும், பல இடங்களில் அது வேண்டாமென்று சொல்லும் நிலை இருக்கிறது. பல இடங்களில் நைலான் வலை வேண்டும் என்று வற்புறுத்துகிறவர்களும் இருக்கிறார்கள். அதற்குப் பல லட்சக்கணக்கில் தொகை ஒதுக்கி வைத்திருக்கிறோம். வெளியே இருந்து கிடைக்க வேண்டியிருப்பதால் கொஞ்சம் தட்டுப்பாடு இருக்கிறது. பல இடங்களில் மீனை உற்பத்தி செய்ய கிராமங்களிலிருக்கும் ஏரி, குளங்களில் மீன் விடுவதற்கு நடை முறையில் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இந்த முறையில் மீன் இலாகா அதிகாரிகள் நல்ல முறையில் மக்களிடத்தில் நன்றாகக் காரியம் செய்து வருகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே போல பல இடங்களில் மீனைப் பிடித்தவுடன் கெடாமல் வைத்து—ஒரு வாரத்துக்காவது அதை வினியோகம் செய்ய வேண்டுமென்று எண்ணம் கொண்டு பல சிறு கிராமங்களில் கூட Cold storage —குளிர் அறைகள் கட்டி வருகிறோம். அதற்கும் நிறையத் தொகை ஒதுக்கி வைத்திருக்கிறோம். அதுவும் கூடிய சீக்கிரத்தில் கிடைக்கும் என்று சொல்கிறேன். அதே போல மீனவர்களை எடுத்துக்கொண்டால், அநேகமாக 620 மைல் நீளத்தில் 600 கடலோர கிராமங்களில் அவர்கள் வசிக்கிறார்கள். ஜாதி என்று சொல்லும் முறையைப் பார்த்தால் கிருஸ்தவர்கள் இருக்கிறார்கள். நாடார் கிருஸ்தவர் இருக்கிறார்கள். நாடாராகவே இருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் பார்த்தால் முஸ்லீம்கள் கூட மீனவர்களாக இருக்கிறார்கள். ஆக, இதைப் போல இருக்கும் ஒரு பொதுவான ஜாதி— **Community**- யைப் பார்க்கும் போது, ஒவ்வொருவரும் அவரவர்க்கு வேண்டுமென்று சொல்லும் நிலை ஏற்படுவதால் தான், இதைப் போல சிக்கல்களைச் சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அதை நிவர்த்தி செய்யும் நிலையில் நடை முறையில் திட்டத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர்கள் எல்லாம் இருசபைகளிலும் இதைப் பற்றி மிக விரிவாகச் சொன்னார்கள். பொதுவாகப் பார்த்தால் எந்தத் திட்டத்தையும் அவர்கள் வெறுப்பதாகத் தெரியவில்லை. ஏதோ திட்டம் வேண்டாம், செலவு அதிகமாக இருக்கக் கூடும் என்று சொல்கிறார்களே தவிர, சொல்லி முடித்து அவர்கள் உட்காரும் நேரத்தில் அவர்களாகவே புதிய திட்டத்தைச் சொல்லி விடுகிறார்கள்.

திட்டம் போட வேண்டுமென்றால், நமக்கு வரி போடவேண்டிய நிலை ஏற்பட்டதன் காரணமாகத்தான் பல காரியங்களைச் செய்கிறோம். அதைத்தான் கனம் அங்கத்தினர் திரு. அன்பழகன் சொல்லும்போது சொன்னார்கள். அவர்கள் வரியைப்பற்றிச்

[திரு. என். நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்]
[6th July 1962

சொல்லிக்கொண்டு வரும் நேரத்தில் மீனவர்களைப்பற்றிப் பேசும் போது மீனவர்களுக்கு நைலான் வலை எங்கே என்று கேட்டார். அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி செய்து வருகிறோம்.

5-30 p.m. அதே போல புதிதாகப் படகுகள் கட்டுவதற்கு அதிலே நல்ல படி கடனைப் பிரித்துக் கொடுத்து அதன் மூலமாக மீனவர்களுக்கு உபயோகப்படும் காரியங்களைச் செய்து வருகிறோம். அதைக் கூட மீனவர் கூட்டுறவு சொசைட்டி என்று வைத்து அதன் மூலமாக, பல லட்சம் கொடுத்து அது உபயோகப்படும் நிலையும் இப்போது ஏற்பட்டு வருகிறது. அதை விரிவுபடுத்தி வருகிறோம்.

அதே போல எந்த இடத்தில் புதிதாக அணைகள் கட்டப் பட்டிருக்கின்றனவோ, அந்த இடத்தில் மீன்களை வளர்க்க நர்சரிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதுவும் தவிர **Insemination** போன்ற பல முறைகளைக் கண்டுபிடித்து அதிகமாக மீன்களை உற்பத்தி செய்ய முயன்று வருகிறோம். இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், குளம், குட்டை போன்ற **Inland**-ல் எல்லாம் மீன்களை வளர்க்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். நான் மீன் சாப்பிடுவதில்லையாதலால், மீன்களுக்கு என்னிடத்தில் நல்ல பாதுகாப்பு இருப்பதோடு, வளர்ச்சியும் அதிகமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தது, காட்டிலாகா. காட்டிலாகா என்று சொல்லுகிற போது நிறையச் செய்ய வேண்டிய காரியங்கள் இருக்கின்றன.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மீன் உரத்தைப்பற்றித் தெரிவிக்கவில்லை. அதைப்பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. என். நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: நான் அதைப்பற்றித் தெரிவிக்க வேண்டுமென்றிருந்தேன். ஆனால் சொல்லுகிற நேரத்தில் விட்டுவிட்டேன். மீன் செதில்களைச் சேகரித்து நல்ல உரம் உண்டாக்கிக்கொண்டிருக்கிறோம். அதற்குப் பரிட்சார்த்தமாக **Factory** வைத்து நடத்திக் கொண்டிருக்கிறோம். அதை விரிவு படுத்தத் திட்டமிருக்கிறது. மீன் உரத்துக்கு விவசாயிகளிடத்தில் நல்ல வரவேற்பிருக்கிறது.

அடுத்ததாக, காட்டிலாகாவைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நான் முதலில் தெரிவித்தது போல, நிறையக் காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. காகிதத் தொழிற்சாலை, ரயான் பேக்டரி இவற்றிற்கு வேண்டிய மரங்களை உற்பத்தி செய்து கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இது மாத்திரமல்லாமல் காகித சாலைக்கும், குடித்தனக்காரர்களுக்கும் உபயோகப்படுகிற மூங்கிலை வளர்க்க, முடிந்த வரையில் அதிகமாகப் பயிர் செய்யத் திட்டம் வைத்திருக்கிறோம். அந்தத் திட்டத்துக்கு வருகிற வருடத்தில் ஒரு சில லட்ச ரூபாய்களை—ஒதுக்கி வைத்து 6 முதல் 7 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யப் போகிறோம். மொத்தத்தில் 15 வருடத் திட்டம் போடப்பட்டிருக்

[திரு. என். நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார்]

6th July 1962]

கிறது. அந்தத் திட்ட முடிவிற்குள் மொத்தம் 30 ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கு இந்தப் பயிரை விஸ்தரிக்க எண்ணுகிறோம். நம்முடைய நாட்டின் பரப்பில் 17 சத விகித பரப்பளவுக்குத்தான் காடு இருக்கிறது. இந்த 17 சத விகிதப் பரப்பை 33 சத விகிதம் ஆக்க வேண்டுமென்று திட்டம் வகுத்து காரியங்கள் செய்து கொண்டு வருகிறோம். இன்றும், சாதாரணமாக உபயோகத்தில் இல்லாத நிலங்களில் நல்ல விறகுக்கு ஆகக் கூடிய மரங்களை வைத்து வளர்க்க முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த முயற்சிக்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. கிராமங்களில் பஞ்சாயத்து போர்டுகளுக்குக் கொடுக்கப்பட்ட இடங்களை **(Site)** காட்டிலாகா எடுத்து, விறகுக்கு ஆகக்கூடிய மரங்களை வைக்கிற அளவுக்கு காட்டிலாகா முன் வந்திருக்கிறது. **Hybrid Bluegum** மரம் பல காலமாக ஊட்டியில் தான் பயிராகிக் கொண்டிருந்தது. இப்போது **Plains-** ல் பயிராகக் கூடிய **Hybrid Bluegum** வகையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அந்த வகையைத்தான் செங்கற்பட்டு மாவட்டத்திலும், மற்ற பாகங்களிலும் விரிவாக வைத்துக்கொண்டு வருகிறோம். காகிதம், செயற்கைப் பட்டு, தோல் பதனிடுதல் போன்ற தொழில்களுக்கு **Bluegum, Wattle** போன்ற மரங்கள் மூலப் பொருள்களாகத் தேவைப்படுகின்றன. **Rayon Factory-** க்கு இந்த மரங்கள்— அதிகமாகத் தேவைப்படுவதால், அவர்களும் சர்வே செய்து ஒரு ஆயிரம் ஏக்கரில் இவைகளைப் பயிர் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதைச் செய்து கொடுக்கத் திட்டம் வகுத்திருக்கிறோம். அதே போல சேஷசாயி சகோதர்களின் காகிதத் தொழிற்சாலைக்கு மூங்கில் பயிர் செய்து கொடுக்கத் திட்டம் போட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, காட்டு மிருகங்களுக்கு நல்ல முறையில் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. முதுமலை என்ற இடத்தில் பார்த்திருப்பீர்கள் என்று கருதுகிறேன். அந்த விரிவான இடத்தில் காட்டு மிருகங்களுக்கு நல்ல பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காக சுடுகிறவர்கள் அங்கே சுடக்கூடாது என்ற விதியை ஏற்படுத்தியிருக்கிறோம். கள்ளத்தனமாகச் சுடுகிறவர்கள் இருக்கிறார்கள். அதை உஷாராக கவனிக்க வேண்டிய பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறது. நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்தமாதிரி பாதுகாப்புக் கொடுத்து, காட்டு மிருகங்கள் பராமரிப்பில் கவனம் செலுத்தி, ஒரு **Sanctuary** முதுமலையில் வைத்திருக்கிறோம். வேடந்தாங்கலில் **Birds Sanctuary** வைத்திருப்பதோடு, இரவு நேரங்களில் மக்கள் வந்தால் அங்கு தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டு வருகிறோம்.

அடுத்ததாக, சந்தன மரத்தைப்பற்றிச் சில வார்த்தை. காட்டிலாகாவிலிருந்து சர்க்காருக்கு வருகிற வருவாயில், அதிகமான வருவாய் சந்தன மரத்திலிருந்துதான் வருகிறது. 1961-62-ம் வருடத்திற்கு சந்தன மர விற்பனை மூலம் 1 கோடி 60 ஆயிரம்

[திரு. என். நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார்]
[6th July 1962

ரூபாய் வருவாய் வந்திருக்கிறது. சந்தணத்தைலம் **(Sandalwood Oil)** எடுக்கும் தொழிற்சாலை வைத்தால் இன்னும் அதிக லாபம் வரும் என்று அங்கத்தினர்கள் கீழ் சட்டசபையில் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அதைப் பரிசீலித்துப் பார்த்தபோது, **Sandal-wood Oil Factory** வைத்து சிரமப்படுவதைவிட, அதில் கிடைக்கிற வருவாயைவிட, சந்தன மரத்தை ஏலம் விடுவதின் மூலம் வருடா வருடம் கோடிக்கணக்கான ரூபாய் வருவாயாக சர்க்காருக்கு வந்து கொண்டிருக்கிறது. சந்தன மரத்துக்கு ஒரு தனியான நோய் உண்டாகிக் கொண்டிருக்கிறது. 1913-ம் வருடத்திலிருந்து அதைத் தடுக்க வேண்டும், அல்லது நோய் வந்த பிறகாவது சிகிச்சை செய்ய வேண்டுமென்று முயற்சி எடுத்தும் ஒரு பலனும் இல்லாமல் இருக்கிறது. அதற்கு இன்னும் ஆராய்ச்சி **Research** செய்கிற முறையை அதிகப்படுத்துவதற்கு இந்தத் திட்டத்தில்
5-40 p.m. நல்ல தொகை ஒதுக்கி வைத்து, நம்முடைய சர்க்கார், மைசூர் சர்க்காரோடு ஆலோசித்து, நல்ல மருந்தைக் கண்டுபிடிக்க முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தத் துறையிலே இருக்கிற உத்தியோகஸ்தர்கள் நல்ல ஈடுபாட்டுடன் நிர்வாகக் காரியங்களை செய்துகொண்டிருக்கிருர்கள். இருந்தாலும் ஆங்காங்கிருந்து புகார்கள் வந்துகொண்டுதான் இருக்கின்றன. அதையெல்லாம் கவனித்து சீக்கிரம் நிவர்த்தி செய்யவேண்டியதுதான் என் வேலையாகவும் சர்க்காருடைய வேலையாகவும் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுக்கு வருகிறேன். கூட்டுறவு என்று சொல்லும்போது அது ஒரு விரிவான ஸ்தாபனம். பல அங்கத்தினர்கள் பேசினர்கள் விலைவாசி கட்டுப்படுத்தபட வேண்டுமென்று. இதற்கெல்லாம் வழிவகை செய்யவேண்டுமென்றால், கூட்டுறவு மூலம்தான் அது முடியும். அதைத்தான் பரிட்சார்த்தமாக, பத்திரிகை படிக்கின்ற கனம் அங்கத்தினர்கள், பொதுமக்கள் எல்லோரும் அறிந்திருப்பார்கள். விலைக் கட்டுப்பாட்டோடு விற்கக்கூடிய கடைகள்—லாப நஷ்டம் இல்லாமல் சர்க்கார் நடத்த வேண்டுமென்று பத்து இடங்களில் ஏற்பாடு செய்திருக்கிறோம். அதை விரிவுபடுத்த எண்ணம் இருக்கிறது. கோவை, மதுரை, சேலம் போன்ற நகரங்களில் அவற்றை விரிவுபடுத்தவேண்டுமென்று இருக்கிறோம். பரிட்சார்த்தமாக சென்னைக்குப் பக்கத்தில் ஆரம்பித்திருக்கிறோம். இங்கு நன்றாக நடந்துகொண்டிருக்கிறது என்று நம்புகிறேன். கூட்டுறவு ஸ்தாபனத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால், தமிழ்நாடு பூராகவும் கூட்டுறவு சங்கங்கள் மொத்தமாகக் கடன் கொடுக்கக்கூடிய சங்கங்கள் இன்னும் பல சங்கங்களும் சேர்ந்து 16,000 சங்கங்கள் இன்று தமிழ்நாட்டில் உண்டாகியிருக்கின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 16,000 என்பது 20,000 ஆகுமென்று நினைக்கிறேன். அந்தத் திட்டத்தில் தான் இப்போது வேலை செய்துவருகிறோம். கூட்டுறவு ஆலைகள், கூட்டுறவு கரும்பு பிழிகின்ற ஆலைகள், இவை போன்றவையெல்லாம் கூட்டுறவுத் துறையில் அமைத்துக்கொண்டிருக்கிறோம். என்ன அமைச்சர் கூட்டுறவு, கூட்டுறவு என்று சொல்லிக்

[திரு. என். நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்]
6th July 1962]

கொண்டிருக்கிருரே என்று பலர் சொல்லலாம். குறுகிய காலத்தில் நான் தெரிந்துகொண்ட அளவில், கூட்டுறவு மூலம்தான் எல்லாக் காரியங்களேயும் செய்யவேண்டுமென்ற கருத்து பொது மக்களிடையே இன்று வந்திருக்கிறது. கிராம மக்களிடத்தில் 100-க்கு 72 பேர்கள் இந்தக் கூட்டுறவு ஸ்தாபனத்தில் கலந்து விட்டார்கள். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறும் காலத்தில் அனேகமாக 100-க்கு 90 பேர்கள் கூட்டுறவு ஸ்தாபனத் திற்கு வருவார்கள் என்று நம்புகிறேன். உதாரணத்திற்குச் சொல் கிறேன், குன்னூர் பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் 100-க்கு 96 பேர்கள் இப்போது கூட்டுறவு இயக்கத்தில் கலந்து விட்டார்கள். மூன்ருவது திட்டம் முடிகிற காலத்தில் அது போன்ற இடங்களில் 100-க்கு 100 பேர்கள் கூட்டுறவு ஸ்தாப னத்தில் கலந்து விடுவார்கள் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கிறது. பல அங்கத்தினர்கள் பேசுகிற சமயத்தில் இன்றைக்கு விலைவாசிக் கட்டுத்திட்டம் வேண்டுமென்று சொன்னுர் கள். விலைவாசி கட்டுப்படவேண்டுமென்ருல், அது கூட்டுறவால் தான் முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

'Full Finance Scheme' என்று ஒன்று ஏற்பாடு செய்யப் பட்டு பல இடங்களில் அது நடைபெற்று வருகிறது. அது வரும் போது பொதுமக்களுக்கு நல்லமுறையில் அது உபயோகப்படு மென்று கணக்குப் போட்டிருக்கிருேம். அது நன்ருக நடந்து கொண்டிருக்கிறது. கூட்டுறவு என்று எடுத்துக்கொண்டால், அது ஒரு பொதுக்காரியம். தனியார் துறையில் அக்கரை கொண்ட வர்கள் செய்யும் காரியங்களிலுள்ள பல தொல்லைகளும் இதில் உண்டு. பொறுப்பும் அதிகமுண்டு. தனியார் துறையில் எவ்வளவு சிரமம் இருக்கிறதோ அந்த சிரமம் இதிலும் இருக்கும். அவற்றை ஏற்றுக்கொள்வார்களென்று அதில் ஈடுபட்டுள்ள நண்பர்களை எதிர் பார்க்கிருேம். இதில்கூட சட்டதிட்டங்கள் வகுத்திருக்கிருேம். இரண்டு நாட்களுக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் திரு. சுப்பையா செட்டியார் அவர்கள், ஒருவரே பல ஆண்டுகள் இந்தக் கூட்டுறவு ஸ்தாபனத்தில் இருந்துகொண்டிருக்கிருர்கள் என்றும், மற்றவர்களுக்கு அதில் பங்கு இருப்பதில்லை, கிடைப்ப தில்லை என்றும் சொன்னுர்கள். ஐந்து வருஷங்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்று சட்டம் போட்டிருக்கிருர்கள் அரசாங் கத்தில். எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கிற அமைச்சர் அவர் களிடத்தில் அந்தப் பொறுப்பு இருந்தபோது, நல்ல ஏற்பாடுகளை அவர்கள் செய்திருக்கிருர்கள். இருந்தபோதிலும்கூட இன்னும் அதற்கு வேண்டிய ரூல்ஸ் தயார் செய்துகொண்டிருக்கிருேம். அதிலேயே இருந்துகொண்டிருக்கிருர்கள் என்ற நிலையும் புதிதாக வருகிறவர்களைச் சேர்த்துக்கொள்ள மறுக்கிருர்கள் என்ற நிலையும் மாறிவிடும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதை மிகத் தீவிரமாகச் செய்துகொண்டிருக்கிருேம். அங்கத்தினர் சொல்லியதால் அதைச் சொல்கிறேன்.

அதைபோல விவசாயத் துறையில் கூட்டுறவு விவசாயப் பொது நிலங்கள் இருக்கிற இடங்களில் கூட்டுறவுப் பண்ணைகள் பரிட்சார்த்தமாக வைத்துப் பார்த்து வருகிருேம். நில அடமான

[திரு. என். நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்]

[6th July 1962

பாங்குகளை எடுத்துக்கொண்டால் தாலூக்காவுக்கு ஒன்று ஏற்பட வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். அந்த முறையில் இன்னும் 41 நில அடமான பாங்குகள் ஏற்படுத்தப்பட்டுவிட்டால் அனேகமாக தாலூகாவுக்கு ஒன்றாக ஏற்பட்டுவிடும் என்ற திட்டம் இப்போது நாங்கள் போட்டிருக்கிறோம். அதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதேபோல இந்த பாங்குகள்கூட சென்ட்ரல் பாங்கு மூலமாக நீண்ட காலக் கடன், குறுகிய காலக்கடன், மத்தியக் காலக்கடன் என்று இப்போது ஏற்பட்டிருக்கிறது. நீண்ட காலக்கடன்களை விட மத்தியக் காலக்கடன் போதும் என்ற சந்தோஷம் விவசாயிகளிடத்தில் இருக்கிறது. மத்திய காலக்கடன் கொடுக்க ஸ்டேட் பாங்கியிலிருந்து தொகை கிடைத்தால் இங்கிருந்து நகரங்களில் இருக்கிற சென்ட்ரல் பாங்குகளுக்குப் பணம் கொடுக்க முடியும். அப்போது அவர்கள் மத்திய காலக் கடன் கொடுக்க தயங்க மாட்டார்கள். ரிசர்வ் பாங்கிலிருந்து பணம் வாங்கி அதைப் பாங்குகளுக்குக் கொடுக்கிற ஒரு முறையைக்கூட அவசியமாக அவசரமாகச் செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். அது முடிந்தால் அந்தத் திட்டம் கிராமங்களில் நிறைவேறுகிற காலத்தில் இன்னும் நல்லமுறையில் அதை வரவேற்பார்கள். இன்னும் கூட்டுறவு பற்றிச் சொல்லவேண்டுமானால், நிறையச் சொல்லிக்கொண்டே போகலாம். (இடைப்பேச்சு : கடன் கொடுத்தால் போதும்.) கடன் கொடுப்பது மாத்திரமல்ல. ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பு அளிக்கிற திட்டம்தான் இந்தக் கூட்டுறவுத் திட்டம்.

திரு. எம். சுப்பையா செட்டியார் : உர வினியோகத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும்.

கனம் திரு. என். நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : உர வினியோகத்தைப்பற்றிச் சொல்லவேண்டுமென்று நண்பர் சொல்கிறார். அதைச் சிறந்த முறையில் செய்ய முயற்சி நடந்து வருகிறது. பட்ஜெட்டில்கூட அதை நிதியமைச்சர் அவர்கள் குறிப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். நானும் இங்கிருந்து 10 வருஷங்களாக பத்து பட்ஜெட்டுகளைப் பார்த்திருக்கிறேன். இந்த விஷயத்தில் எனக்கே ஒரு சந்தோஷம். இதற்கென்று தனியாக ஒரு மந்திரி வந்துவிட்டதன் காரணமாக விரிவாக இந்த கூட்டுறவு, மீனிலாகா, காட்டிலாகா இவைகளைப்பற்றி அதிகமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக என் வணக்கமும் பாராட்டுதலும் முன்பு இருந்த நிதி அமைச்சருக்கு உண்டு என்பதைச் சொல்லிக்கொண்டு பொதுமக்களுடைய ஒத்துழைப்பு கூட்டுறவுக்கு அதிகம் வேண்டும் என்பதை அறிவு சார்ந்த பெரியவர்களும், நண்பர்களும் கிராமங்களுக்குச் செல்லும்போது, இதைப்பற்றி விரிவாகச் சொல்லும் பழக்கம் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுமக்களுக்குக் கொடுக்கத்தான் சர்க்கார் திட்டம் போடுகிறார்கள். திட்டம் போட்டால் வரி விதிக்கத்தான் வேண்டி வரும். வரிகளை எதிர்த்து, சர்க்கார் திட்டங்களை எதிர்த்துப் பேசுகின்ற நண்பர்கள்

[திரு. என். நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்]
6th July 1962]

பேசி முடிக்கின்றபோது திட்டங்களைப் பற்றி தான் பேசிவிட்டு முடிக்க வேண்டியிருக்கிறது. திட்டங்கள் வேண்டுமென்றுதான் அவர்கள் முடிவு தெரிகிறது. ஆகையால் சர்க்கார் செய்வது அவர்கள் சொல்லுகின்ற திட்டங்களுக்குத்தான் என்று சொல்லி கூட்டுறவு இயக்கத்தை வளர்க்கவேண்டுமென்றும் அது நல்ல கூட்டுறவாக இருக்கும்படி செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. கே. ராமதாஸ்: தலைவர் அவர்களே, மிகவும் அனுபவமும் அறிவும் வாய்ந்த அமைச்சர் அவர்கள் சிறந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை வரவேற்கிற முறையில் நான் என் உரையை நிகழ்த்த ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னால், கனம் அங்கத்தினர்கள் பேசிய பொழுதெல்லாம், ஏதோ வரி விதிப்பு ஏழைகளைப் பாதிக்கும் என்றெல்லாம் மிக விளக்கமாக எடுத்துப் பேசினார்கள். மார்கழி மாதத்தில் காலை நேரங்களில் பஜனை கோஷ்டி வீதி வீதியாக வருகிறபோது, ஒரே பாட்டை அந்த முப்பது நாளைக்கும் திருப்பித் திருப்பிப் பாடிக்கொண்டு வருவார்கள். அதைப்போல் எதிர்க் கட்சியில் பேசிய அங்கத்தினர்கள் எந்த வரி விதித்தாலும் அந்த வரி ஏழைகளைப் பாதிக்கும், இந்த வரி ஏழைகளைப் பாதிக்கும் என்ற பழைய பல்லவியைப் பாடுகிறார்கள். எந்த வரி விதித்தாலும், ஏழைகளைப் பாதிக்கும் என்று சொல்லும்போது, இவர்கள் கட்சி தோன்றுவதற்கு முன்பே ஏழைகளைக் காப்பாற்றுவதற்காகவே பிறந்தவர்களால் தயாரிக்கப்பட்ட பட்ஜெட் இது என்பதை மறந்து பேசுகிறார்கள். இந்த வரவு செலவுத்திட்டத்தை, மிக நிதானமாக, ஏழை எளியவர்களைப் பாதிக்காத வகையில் எல்லோருக்கும் சம அந்தஸ்து கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில், தயாரித்திருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டவேண்டும். எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லோருமே இல்லாத ஒன்றை வைத்துக் கொண்டு பேசிக் கொண்டிருக்கிறார்களே தவிர, குற்றம் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, இருக்கிற நிலைமையை யாரும் பேசவில்லை. வருமானத்தில் நான்கில் ஒரு பங்கைக் கல்விக்குச் செலவழித்துக்கொண்டு வருகிறது அரசாங்கம். அங்கத்தினர்கள் அவர்களின் மூதாதையர் ஆண்டுகொண்டிருந்த காலத்தில் எத்தனை கல்விச் சாலைகள் இருந்தன, இப்போது எவ்வளவு கல்விச்சாலைகள் வளர்ந்திருக்கின்றன என்பதை யோசித்துப் பார்த்தால், நாடு எவ்வளவு முன்னேறிச் செல்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால், அவர்கள் மனச்சாட்சியே அவர்களுக்கு பதில் சொல்லும்.

அதுமட்டுமல்லாமல் ஒரு கட்சியைச் சார்ந்த நண்பர் அவர்கள் பேசினார்கள். அவர் இந்த சபையில் சொல்லக் கூடாத வார்த்தைகளை, பார்லிமெண்டரி முறைக்குப் புறம்பான வார்த்தைகளைப் பேசியது குறித்தும், அவர் ஒரு மத அடிப்படையில் பேசும்போது அந்த மதத்தைச் சார்ந்த மக்கள் ஏதோ அமைதியில்லாமல் வாழ்கிறார்கள், பயந்து கொண்டு வாழ்கிறார்கள் என்று பச்சையாகக் குறிப்பிட்டார். நான் அவர்களுக்கு ஒன்று சொல்லிக் 5-50 p.m.

கொள்ள ஆசைப்படுகிறேன். ஜனநாயகத்தின் பெயரால் இன்று ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் என்ன பேசினாலும், பிள்ளையார் கோவிலை இடித்து தண்ணீரில் போட்டாலும், இஸ்லாம் ராஜ்யம் அமைக்க போலீஸ் ஸ்டேஷனைத் தாக்கினாலும், அவர்களுக்குச் சம அந்தஸ்து கொடுத்த தவறுதான் இது என்று எண்ணுகிறேன். இந்த அளவுக்குச் சம அந்தஸ்து கொடுக்கப்பட்டது. ஏன் கொடுக்கப்பட்டது? பெரும்பாலான மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியில் இங்கே மைனாரிடி இனத்தைச் சார்ந்தவர்கள் மனம் புண்படக்கூடாது என்று இடம் கொடுத்த காரணமாக அவர்கள், மேடையில் பேசுவதுபோல், இங்கே பேசுவதைப் பார்க்கும்போது இதைவிட ஜனநாயகம் வேறு எந்த நாட்டில் இருக்க முடியும்? அவருக்குப் பதில் சொல்லிக் கொண்டு போவதைவிட என்னுடைய எண்ணத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய வரவு செலவுத் திட்டம் நல்ல முறையில் தயாரிக்கப் பட்டது என்று குறிப்பிட்டேன். நான் ஒரு வேண்டுகோளை அமைச்சருக்கு விடுத்துக்கொள்ள விரும்புகிறேன். ஏழைக் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி கொடுக்கும் பெற்றோர் வருமான வரம்பை ரூ. 1,500-ஆக உயர்த்தியிருக்கிறார்கள். ரூ. 1,500 என்று பெயரே தவிர, சூழ்நிலை காரணமாக சாதாரண தொழிலாளிக்குக் கூட மாதம் ரூ. 125 வருமானம் வரும் வகையில் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது. ஆகவே, இலவசக் கல்வியை இலவசமாகப் பயன் படுத்தும் வகையில், அதை ரூ. 1,800-ஆக மாற்ற வேண்டிய முயற்சிகள் அமைச்சர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பணி வன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இந்த வரவுசெலவுத் திட்டத்தில் சென்னை நகரத்தைப்பற்றி நாம் யோசிக்க வேண்டும். என்ன வென்றால் இன்று 'Capital City' தமிழகத்தின் தலை நகரமாக இருப்பது சென்னை நகரம். இந்த நகரத்தின் தேவைகள் அதிகரித்துக் கொண்டு போவதை நாம் பார்க்கிறோம். நகரசபையில் போடப்பட்ட திட்டங்கள்—குடிநீர் வசதி, நீர் போக்குவதற்கு—இவற்றுக்கு **Plan** போட்டு வேலை செய்த நேரத்தில் சுமார் 7 லட்சம், 10 லட்சம் ஜனத்தொகையை மனதில் கொண்டு போடப்பட்ட திட்டங்கள். இன்று ஏறக் குறைய 18 லட்சம், 20 லட்சத்தை எட்டிப் பிடிக்கும் நிலைக்கு மக்கள் தொகை அதிகரித்திருக்கிறது. ஆனால் இன்னும் கழிவு நீர் போக்கு எப்படி இருக்கிறது என்று பார்த்தால், காலை நேரத்தில் சரியாகப் போகாமல் அங்கே இருக்கும் மக்கள் சாக்கடையில் வசிக்கும் நிலையில் இருக்கிறார்கள். துரதிருஷ்டவசமாக, நகர சபை பொறுப்பேற்றும் ஒன்றும் செய்யமுடியாத நிலையிருக்கிறது. நகர சபைக்கு ரூ. 50,000 கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். கடன் கொடுத்தால் மட்டும் போதாது. அது சரியாகப் பயன்படுத்தப்படுகிறதா, அதைத் திருப்பிக் கொடுக்கிறார்களா என்று கண்காணிக்கும் முறையில் ஒரு நிரந்தரக்கமிட்டி போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

6th July 1962] [திரு. கே. ராமதாஸ்]

ஏனென்றால் நகர மக்கள் நிலையை சரியாகப் புரிந்து கொள்ளாத காரணத்தால், நகரசபை திண்டாடுவதைப் பார்க்கிறோம். ஆகவே தான் அந்த வகையில் உங்களைக் கேட்பது—பணம் கொடுத்தால் போதாது—கொடுத்த பணத்தைச் சரி வரச் செலவு செய்கிறார்களா என்று பரிசீலிக்க ஒரு கமிட்டி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று நம் முதலமைச்சரவர்கள் சென்னை நகரத்திற்குக் குடிநீர் கொண்டு வருவதில் மிக அக்கரையாகவும், சுறு சுறுப்பாகவும் இருப்பதைப் பார்க்கிறோம். கோழி காலையில் கூவுவதால்தான் சூரியன் உதிக்கிறான் என்று சொல்வதைப் போல், எதிர்க்கட்சி நண்பர்கள் எங்களால்தான் சர்க்கார் அதைச் செய்தார்கள் என்று பேசிப் பெருமை அடித்துக்கொள்வதில் ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்னால் இந்தப் பிரச்சனையை முதலில் எழுப்பியவர் நமது முதலமைச்சர். அதேபோல சென்னை நகரை 'ஏ' பிரிவாக்கும் ஆலோசனை கூறியவர். அதை நிறைவேற்ற வேண்டுமென்ற துடிப்புக் கொண்டவர் நமது முதலமைச்சர் என்பதை யாரும் மறுக்க முடியாது. இருந்தாலும் எதிர்க்கட்சி நண்பர்கள் நாங்கள்தான் காரணமென்று . . .

திரு. க. அன்பழகன் : அப்படி இன்னும் வரவில்லையே.

திரு. கே. ராமதாஸ் : வரும். ஆகவே இந்த வகையில் எதிர்க்கட்சி நண்பர்களுக்கு இருக்கும் அக்கரையைவிட எங்களுக்கு அதிக அக்கறை இருக்கிறது என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த இரண்டு விஷயங்களிலும் உடனடியாக நாம் மேற்கொண்டு செய்ய வேண்டிய வேலைகள் இருக்கின்றன. எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக அல்ல. உண்மையாகச் செய்யவேண்டிய காரியம்.

சினிமாத் துறை குறித்து, கலைஞர்களைத் தூற்றிப்பேச வேண்டுமென்ற எண்ணத்தினால் சொல்லவில்லை. நேற்றுப் பேசிய கனம் M.G.R. அவர்களும், மதிப்பிற்குரிய K. R. ராமசாமி அவர்களும் இன்று நின்று நினைவுபடுத்திப்பார்க்க வேண்டும். இந்த சர்க்கார் ஏற்பட்டு—சுதந்திரத்திற்குப் பின்னால்—மதுவிலக்குக் கொண்டுவரவில்லை என்றால், கலைத்துறை இந்த அளவுக்கு உயர்ந்திருக்குமா என்று யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். முன்பு வண்டி இழுக்கும் மனிதன் முதல் சாதாரண மனிதன் வரை குடித்துவிட்டு கீழே விழுந்து கிடப்பானே தவிர, சினிமாவுக்கு வரமாட்டான். சுதந்திரத்திற்கு முன்னால் எத்தனை சினிமாக்கொட்டகைகள், ஸ்டுடியோக்கள் இருந்தன? இப்போது எவ்வளவு? அன்று அவர்களுடைய வருமானம் எவ்வளவு? இன்று எவ்வளவு? இதை யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். வளரும் நேரத்தில் இதைப் புரிந்துகொண்டிருப்பவர்கள், நன்றி சொல்ல மறந்து விட்டாலும் அவர்களைக் கண்டிக் காமலாவது இருக்க வேண்டாமா என்று கேட்கிறேன். அவர்

களுக்கு அதிகமாக வரி போடுவது குறித்து நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. அவர்கள் ஏன் இதை மறந்து விடுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

இன்று பெண்களுக்காக 3 உயர் நிலைப்பள்ளிகள் கட்ட முயற்சி எடுத்துக்கொண்டிருக்கும் சர்க்காரை நான் பாராட்டுகிறேன். நான் கனம் அன்பழகன் பேசுவதைப்போல சொல்ல வேண்டு மானால்—வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்று தான் அவர்கள் சொல்வார்கள்—சென்னை நகரைப் பொறுத்த மட்டில், வடக்கு தேய்கிறது, தெற்கு வாழ்கிறது என்று சொல்ல வேண்டும். வட சென்னையில் தொழிலாளர்கள், ஏழை மக்கள் வசிக்கும் பகுதியில் பெண்கள் படிக்க ஓரிரு பள்ளிகள் திறக்க ஏற்பாடுகள் செய்ய கல்வியமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியில் ஒருமைப்பாடு குறித்துப் பேசும்போது இந்த நாட்டு ஒற்றுமை நீடிக்க வேண்டுமானால், பாடப்புத்தகங்களில் விடுதலைக்காகப் போரிட்ட நம் தலைவர்களுடைய சரித்திரம் விளக்கமாக குழந்தைகள் மனதில் பதியும்படி எழுதப்பட வேண்டும். எவர் கண்டித்தாலும் அதைப் பற்றி அக்கறை காட்டாமல் உங்களுடைய கடமையைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மீண்டும் ஒரு முறை நல்ல சர்க்கார், அமைதி யான வரவு செலவுத் திட்டத்தைக் கொண்டுவந்ததற்காகப் பாராட்டி நான் சொன்னதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்பி, என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

6-00 p.m. * **திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம்:** கனம் சட்டமன்றத் தலைவரவர்களே, 1962-63-ம் வருஷத்திய நிதிநிலை அறிக்கையை வரவேற்று நான் சில வார்த்தைகள் பேசப் பிரியப்படுகிறேன். வளர்ந்து வருகிற நாட்டிலே, தொழில்வளம் பெருகிவருகிற நாட்டிலே வரிபோடாமல் ஒரு காரியமும் சாதிக்கமுடியாது என்று முதன் முதலாகச் சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன்.

அடுத்து, கல்வித் துறையில் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டி யாக நம்முடைய மாநிலம் விளங்குகிற முறையில், மக்களால் போற்றப்படுகிற அளவுக்கு முன்னேற்றம் கண்டிருக்கிறோம். பொது மக்களுக்கு எந்த விதமான சங்கடங்கள் இருந்தாலும், மாதாமாதம் குழந்தைகளின் கல்விக்குச் சம்பளம் கட்டவேண்டும் என்ற நிலை இல்லாமல் செய்திருப்பதால், அரசாங்கத்தை அவர்கள் பாராட்டுவதோடு குழந்தைகள் சீருடைக்காக, உணவுக்காக சர்க்கார் வரி விதிக்கிறார்கள் என்றால், அவர்கள் கவலைப் படமாட்டார்கள் என்று எண்ணுகிறேன். வரி இல்லாமல் ஒரு காரியமும் சாதிக்கமுடியாது என்பதை மாற்றுக் கட்சிக்காரர்கள் ஒத்துக்கொண்டு வரிபோடுவதை உள்ளத்தில் வரவேற்றாலும், உதட்டளவில் எதிர்க்க வேண்டுமென்பதற்காக எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். அப்படி எதிர்ப்பதாக இருந்தால், நகரத்தில் ஏழைகள் வாழ்கிற குடிசை களுக்கு வரி போட்டிருக்கமாட்டார்கள். காங்கிரசுக்காரர்

6th July 1962] [திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம்]

களாகிய நாங்கள் நகராட்சி மன்ற நிர்வாகப் பொறுப்பிலிருந்த போது, ஏழைகள் வாகனம் என்கிற சைகிளுக்கு வரியே கூடாது என்று எடுத்தோம். இன்று அந்த ஏழைகள் வாகனத்துக்கு இவர்கள் வரிபோட்டிருக்கிறார்கள். தாங்கள் செய்வதை மறந்து விட்டு, காங்கிரசு அரசாங்கம் வரிபோட்டால் எதிர்க்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, மக்கள் வாழ்வுக்காக எங்கே பார்த்தாலும் தொழிற்சாலைகள், பள்ளிக் கூடங்கள், மின்சார வசதி என்று சிறப்பாக வேலை செய்கின்ற ஒரு காரணத்தைக் கொண்டுதான், இந்தக் கூடுதலான வரிவிதிப்பை ஏற்பாடு செய்திருக்கிறது. இந்த அளவுக்கு கல்வித் துறையில் சிறப்பை ஏற்படுத்தி, மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்கச் செய்ய கல்வி அமைச்சரைப் பாராட்டுவதோடு, அதற்காக உழைக்கிற கல்வித் துறை இயக்குநர் திரு. சுந்தர வடிவேலு அவர்களையும் பாராட்டுகிறேன். அதே விதமாக கிராமங்களுக்கு மின்சார வசதியை விஸ்தரித்து, விவசாயிகளுக்கும் கிராம மக்களுக்கும் நன்மை செய்து வருகிற மின்சாரத் துறை அதிகாரிகள், திரு. அப்பாதுரை போன்றவர்களையும் பாராட்டுகிறேன். மற்றும் அமைச்சர்களிலிருந்து மற்ற எல்லா இலாக்காக்களிலும் பணிபுரிகிற அதிகாரிகளையும் பாராட்டுகிறேன்.

சகோதரர் ராமதாஸ் அவர்கள் குறிப்பிட்டது மாதிரி, வட சென்னையில் பெண்களுக்காக ஒரு தனிக்கல்லூரி அவசியம். நம்முடைய அமைச்சரவர்கள் அதைக் கண்டிப்பாக ஏற்படுத்தித்தர வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு வட சென்னையில் பெண்களுக்கு ஒரு நுட்பக் கைத்தொழில் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வட சென்னை ஏழை மக்கள் வாழும் பகுதி. அந்த ஏழை மக்களின் பெண்கள் எத்திராஜ் கல்லூரிக்கோ, லேடி வெலிங்டன் பெண்கள் கல்லூரிக்கோ, தினமும் போக வர எட்டணா பஸ் சத்தம் செல வழித்துப் போய் வர முடியாது. அந்தக் காரணத்தால் S.S.L.C.-யோடு படிப்பை நிறுத்திவிட வேண்டியிருக்கிறது. ஆகையால் அவர்களுக்கு வசதி அளிக்க வடசென்னையிலே ஒரு கலைக்கல்லூரியும், கைத்தொழில் கல்லூரியும் நிறுவ வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நகரத்தின் போக்குவரத்து நெரிசலை நீக்க, கூவம் ஆற்றில் கடல் நீரைவிட்டு, அதில் படகுகளை விட்டு, நம்முடைய முதலமைச்சர் இரண்டு ஆண்டுகளாகச் சொல்லி வருகிற நல்ல திட்டத்தை நிறைவேற்றி, வசதி செய்து தர வேண்டும்.

அடுத்து, நான் தெரிவிக்க விரும்புவது, காங்கிரசுக்காரர்களாகிய நாங்கள் நகராட்சிப் பொறுப்பில் இருந்தபோது, யாதொரு அசம்பாவிதமும் இல்லாது தரமாக நடத்திவந்திருக்கிறோம். ஏன், இந்தச் சட்ட மன்றத்திலும்கூட நேற்று வரையிலும் அறிவாளிகள், படித்தவர்கள், பட்டதாரிகள் மிகவும் தரமாகப் பேசி வந்திருக்கிறார்கள். ஆனால் நான் அதைச் சொல்லுவதற்கே வருத்தப்படுகிறேன், நேற்றுப் பேசிய முஸ்லீம் சகோதரர் மிகத்

தரக்குறைவாக பெண்களை இழிவுபடுத்திப் பேசினர். இனியாவது அவர் அப்படிப் பேசாதிருக்க, ஆண்டவன் அவர் உள்ளத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். வெளியில் கூட பார்க்கப்போனால், பலர் பெண் இனத்தை, தாய்க்குலத்தை மிக இழிவாக, கையைப்பிடித்து இழுக்காத குறையாகப் பேசி வருகிறார்கள் என்பதை சர்க்கார் கவனத்துக்குக் கொண்டு வர பிரியப்படுகிறேன். நம்முடைய சுதந்திர இந்தியாவில், மூன்று பொதுத்தேர்தல்கள் நல்லமுறையில் நடந்தேறியிருக்கின்றன. 100-க்கு 52-ஆக இருக்கிற வாக்குரிமை பெற்ற பெண்கள், வாக்குரிமையின் மதிப்பை உணர்ந்து, வாக்களிக்க அணிவகுத்து நின்ற காட்சியினை இந்தப் பொதுத் தேர்தல்களில் கண்டோம். அப்படிப்பட்ட முன்னேற்றத்துக்குக் காரணமாக இருந்த, உறுதுணையாக இருந்த அருமைத் தலைவர் நேருஜியின் அழகைப் பார்த்து பெண்கள் ஓட்டுப் போட்டார்கள் என்று ராஜாஜி சொன்னது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். காந்திஜி உயிரோடு இருந்திருந்தால், ராஜாஜி பேசியதைக்கேட்டு கண்ணீர் விட்டிருப்பார். நம்முடைய தேசம் நல்லதொரு முற்போக்குச் சக்தியாக இருக்க வேண்டுமென்றால், தாய்க்குலத்தைப் பற்றிப் பெருமைப்படவேண்டும். பாரதியார் பாடினார். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமைதனைக் கொளுத்துவோம்" என்று. அந்த அளவுக்கு, பெண்களை இழிவு படுத்திப் பேசுவதையும், விளம்பரங்களில் பெண்களைக் கேலிப்படுத்துவதையும் கண்டிப்பாக ஒழித்துக்கட்டவேண்டும். சர்க்கார் அதற்கு முன்னணியில் நிற்க வேண்டும். எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, மேடையில் பேசுகிறபோது தாய்க்குலத்துக்கு மதிப்புக் கொடுக்கிற அளவுக்குப் பேச வேண்டும். தரம் குறைந்து பேசக்கூடாது. அப்படி யார் பேசினாலும் அவர்களைத் தண்டிக்கின்ற அளவுக்கு சட்டத்தைத் திருத்தவேண்டும். அந்த அளவுக்குச் செய்தால்தான் வருகிற நகரசபைத் தேர்தலில் பெண்கள் பயமில்லாமல் வாக்குரிமையைப் பயன்படுத்துகிற அளவுக்கு முன் வருவார்கள். ஆங்காங்கு நடக்கிற பேச்சுக்களையும், குழப்பங்களையும் பார்க்கிறபோது, பெண்கள் நடுங்குகிறார்கள் சுதந்திரமடைந்த நம்முடைய தேசத்தில் பெண்கள், தாய்க்குலம் உன்னத வாழ்வும், மதிப்பும் பெற்றுத் திகழ்வதில் அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக, 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கான இல்லங்களை மாவட்டத்திற்கு ஒன்று அமைக்க வேண்டுமென்று திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு ரூ. 1,500 வரை வருமானம் உள்ள பெற்றோர்களின் குழந்தைகளுக்குக் கல்விச்சலுகை கொடுக்கப்படுகிறது. அதேமாதிரி அனாதை இல்லங்களில் இருக்கிற 8 முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 10 ரூபாய் stipend தரப்படுகிறது. 16 வயதிலிருந்து 20 வயதுவரை உள்ள பெண்கள் நூற்றுக்கணக்கானவர்கள் அனாதை இல்லங்களுக்கு வருகிறார்கள். அவர்களுக்கு 10 ரூபாய் கிடையாது. 16 வயதைக் கடந்த பிற்பாடு அனாதை இல்லங்களில் இருப்பதற்கு சட்டமில்லை. அந்த அளவுக்கு இருக்கிற

6th July 1962] [திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம்]

சட்டத்தை மாற்ற வேண்டும். அனாதை இல்லங்களில் இருக்கிற 16 வயதுக்கு மேற்பட்ட, 20 வயதுக்கு உட்பட்ட அந்தப் பெண்களுக்கு உயர்தரப் பள்ளிகளில், கல்லூரிகளில், படிக்கவேண்டுமென்ற ஆசையிருக்கிறது. யாருடைய உதவியில் படிப்பார்கள்? ஆகவே படிக்க முடியாத நிலையிலிருக்கிறார்கள். அந்த விதமாக நம்முடைய இல்லத்தைப் பார்க்கிறபோது 40 குழந்தைகள், 18 முதல் 20 வயது வரை உள்ள பெண்கள் அங்கே வந்து தங்கி அரசாங்க உதவிப்பணம் இல்லாமல் இருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். ஆனால் நம்முடைய மத்திய சர்க்கார் 20 முதல் 30 வயது வரை உள்ள அனாதைப் பெண்களுக்கு கூட E.S.L.C., S.S.L.C. படிக்க கல்விச் சலுகை, உதவிப்பணம் அளித்து வாழ்வு அளித்திருக்கிறது. அதே மாதிரி இங்கேயும் 18 வயது முதல் 20 வயது வரை உள்ளவர்களுக்கும் உயர்நிலைப்பள்ளிப் படிப்பு படிக்க எந்த அனாதை இல்லத்திலும் தங்கிப்படிக்க வசதி செய்யும் ஒரு திட்டத்தை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த சந்தர்ப்பம் அளித்த தலைவரவர்களுக்கு வணக்கத்தைச் செலுத்தி முடிக்கிறேன்.

*திரு. எஸ். பி. கே. ஏ. லட்சுமணன் செட்டியார்: மன்றத் தலைவர் அவர்களே, நான் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்கும் முகத்தான் சில விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுவாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடந்து கொண்டிருக்கிற இரண்டு வருட மத்தியிலே இந்த அறிக்கை வருகிறது. பல துறைகளிலே கண்ணோட்டம் செலுத்தி நல்ல முறையிலே ஒவ்வொரு தலைப்பின் கீழே தகுந்தவாறு அதற்குரிய தொகைகள் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கது, பாராட்டத்தக்கது. பல்வேறு திட்டங்களிட்டு ஐந்தாண்டுத் திட்ட வேலைகள் மூலம் நமது தேசம் வெகுவாக முன்னேறியிருக்கிறது. பெரிய கனரக கைத்தொழில்கள் நடக்க இருக்கும் காலம் வந்ததும் இந்த முன்னேற்றங்களின் பூராப் பலனையும் இந்த தேசம் அனுபவிக்கும். அந்தக் காலத்தில் இந்த தேசம் தென் அமெரிக்காவுக்கு ஒப்பாக இருக்குமென்று நமது கண்ணோட்டத்தில் இன்று நன்றாகத் தெரிகிறது. இந்த முறையில் நமது தேசம் முன்னேறி இருப்பது யாவரும் அறிந்ததே. பொருளாதாரத்தில் மிக மிக முன்னேறியிருக்கிறது. ஆனால் கிராமத்தில் மக்கள் அதற்குத் தகுந்தவாறு முன்னேறிவிட்டார்களா என்பதை நாம் வெகுவாக கூர்ந்த கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும். அவர்களை முன்னேற்றுவதில் மிகவும் அக்கறை கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. அந்த நோக்கத்திலே பிற்கால சந்ததியார்கள் நல்ல மனப்பான்மையிலே தேசப்பற்றிலும் ஒழுங்கான முறையில் தேசத்தில் அக்கறை கொண்டு நடப்பதிலே ஈடுபடவேண்டும். பொருளாதார நிலைக்கோப்பு அவர்கள் அந்தஸ்து உயரவேண்டும். அதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கவேண்டும். அவர்களை வளர்க்கவேண்டும். அதை நமது சர்க்கார் மிக நல்லமுறையில் மனதில் வைத்து கல்வி அமைப்பை மிக மிக முக்கியமாகக் கருதி இந்தத் திட்ட அறிக்கையிலே 20 சத விகிதத்துக்கும் மேலாக அதற்காகத் தொகை

6 10 ஓ.ம.

[திரு. எஸ். பி. கே. ஏ. லட்சுமணன் செட்டியார்] [6th July 1962

ஒதுக்கியிருப்பது வரவேற்கத் தக்கது, பாராட்டத்தக்கது. அதற்கு நமது நிதி அமைச்சர் அவர்களை நான் வாழ்த்துகிறேன். இந்த மாதிரி ஒரு நிலை கிராமத்தில் இருக்கும்போது, அவர்களுடைய வாழ்க்கையை நாம் உயர்த்தவேண்டுமென்ற கருத்து நம் எல்லோருக்கும் வேண்டும். பெருவாரியான கிராமங்களில் விவசாயத் தொழில் அல்லது வேறு எவ்விதத் தொழிலும் இல்லை என்பது தெரிந்த விஷயம். அவர்களுக்கு நான்கு மாதங்கள்தான் தொழில் உண்டு. பாக்கி எட்டு மாதங்களுக்கு வேலையில்லை. வேளாண்மையை எடுத்துக்கொண்டால், விலைவாசிகள் ஏறிக் கொண்டேயிருக்கின்றன என்று சொல்லிக்கொண்டிருக்கிற இந்த நாளையில் அவர்களுடைய தொழிலுக்கும் மற்றக் கருவிகளுக்கும், உரத்திற்கும், மாடுகளுக்கும், பண்ணைக்காரர்களுக்கும் அதேபோல் சம்பள விகிதம் ஏறிக்கொண்டிருக்கிறது என்பதையும் உணர வேண்டும். சுமார் ஐந்து ஏக்கர் வேளாண்மை செய்கிறவர்களை எடுத்துக்கொண்டால், ஒரு ஏக்கர் வேளாண்மை செய்ய ரூ. 250 செலவாகிறது. நான் குறைவாகத்தான் சொல்கிறேன். ஐந்து ஏக்கர்களுக்கு ரூ. 1,250 செலவாகிறது என்று சொன்னால், அவர்கள் அதிலிருந்து பெறுகின்ற வருவாய் 100 கலம். சாதாரணமாக அந்த நெல் விவசாயி அறுவடை முடிந்தவுடனே ரூ. 20, 22-க்கு மேல் கிராமத்தில் விற்க முடியாது. அப்படி விற்கும்போது ரூ. 2,200 வரும்படி வருகிறது. ரூ. 1,250 செலவு. மிச்சம் ரூ. 950. இதில் வரி கட்டவேண்டும். இதை வைத்துக்கொண்டு வருஷம் பூராவும் அவர்கள் வாழ்க்கை நடத்தவேண்டும். இவர்களில் சிலர் கூலி வேலை செய்வதன் மூலம் அரை கூலி, கால் கூலி பெறலாம். நாற்பது சதவிகிதப் பேருக்குத்தான் அப்படிப் பெறுவதற்கும் வசதியிருக்கும். மற்றவர்களுக்குத் தொழிலுக்கு வாய்ப்பில்லை. இந்த முறையில் இப்போது நாம் நினைத்துக்கொண்டிருக்கும் வரியைப் பார்க்கவேண்டும். வரி மிக மிக முக்கியமாக நமக்கு இருக்கிறது. ஆனால் அந்த நிலத்தின் பேரில் செட்டில்மெண்ட் செய்து எந்த இடத்தில் வரும்படி கூட வருகிறது, எங்கு வரும்படி வரவில்லை, எதற்கு திட்டமிட்ட பாசனம் இருக்கிறது, எதில் இல்லை, எதில் வரிபோடலாம், எதற்கு வரிபோடக்கூடாது என்று செட்டில்மெண்ட் செய்து பார்த்துப் போட்டால், அது நிச்சயமாக யாரையும் பாதிக்காது. ஆனால் சர்சார்ஜ் முதல் நிலை, இரண்டாம் நிலை என்று வைத்து குத்து மதிப்பாகப் போடும்போது, சில மானாவாரிப் பகுதிகளில் கஷ்டப் படுவார்கள். குறிப்பாக சிவகங்கைத் தாலுகா மானாவாரிப் பகுதி. சாதாரணமாக 6,000 ஏக்கர் நிலங்களுக்குத்தான் பெரியாற்றுக் கால் மூலம் பாசனம். மற்றப் பகுதிகளுக்கு மழை எப்போது பெய்கிறதோ அப்போதுதான். போட்ட வேளாண்மை வருமா வராதா என்பது ஆண்டவன் விட்ட வழி. அங்கெல்லாம் ஜமீன் காலத்தில் குத்தகை 5 வருஷம். அதில் மூன்று வருஷ வரியைக் கொண்டுதான் குத்தகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முறையில் அதிக வரி போடுவதால், அவர்கள் எவ்வளவு பாதிக்கப்படுவார்கள் என்பதை யோசிக்கவேண்டும். சாதாரணமாக அங்கிருப்பவர்கள் இந்த நிலைமையில் இருக்கிறார்கள் என்று சொன்னால், ஏற்கனவே போட்ட வரி 15 வருஷமாக முன்னே பாக்கி பின்னே

பாக்கி என்று ரூ. 10 லட்சம் வரை பாக்கி நிற்கிறது. இன்றுகூட எனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. வரி வசூலிக்க 'கோயர்சிவ் ஆக்ஷன்' எடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றித் தெரியப்படுத்தவேண்டுமென்று எனக்குத் தந்தி வந்திருக்கிறது. குத்து மதிப்பாக சர்சார்ஜ் செய்வதைக் காட்டிலும் செட்டில்மெண்ட் செய்து போட்டால் நல்லது. அதை நாம் கவனித்துச் செய்யவேண்டும். இப்போது சாதாரணமாக இன்சியூரன்ஸ் திட்டம் விவசாயத்திற்கு வரவேண்டுமென்று ரொம்ப நாட்களாகச் சொல்லிக்கொண்டு வருகிறோம். மானாவாரி பிரதேசங்களில் நிச்சயமாக அவைகளுக்கு ஆதரவு கிடைக்கும்.

சாதாரணமாக பட்ஜெட் தயார் செய்வதில் செலவு ஐடம், மெய்ண்டினன்ஸ் ஐடம், கேபிடல் ஐடம் எல்லாவற்றையும் சேர்த்து தான் டிமாண்ட் செய்யப்பட்டிருக்கிறது. அதனுல் நம்முடைய தேவைத் தொகை அதிகமாக 116 என்று மிகைப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கருதுகிறார்கள். ஆனல் இல்லை. டிரஷரி அந்த நிலையில் இருந்தால்தான் எந்த பேமெண்டையும் கொடுக்க முடியும். எதுவாக இருந்தாலும் டிரஷரி நிலைமை இருந்தால்தான் அதைக் கொடுக்கமுடியும். அந்த நிலைமையில் எல்லாவற்றையும் சேர்த்து பட்ஜெட் செய்திருப்பதுதான் ஒழுங்கு. அந்த முறையில் நமது தேசத்திலுள்ள எல்லா மாகாணங்களையும் பார்க்கும்போது எல்லாம் டெபிசிட் பட்ஜெட்டுதான் செய்திருக்கிறார்கள். கணக்குப்படி நோக்கினல் டெபிசிட் பட்ஜெட் இல்லை. மெய்ண்டினன்ஸ், கேபிடல் இருக்கிறது. நிதி நிலைமை டிரஷரியில் சரியாக இருக்கவேண்டுமென்றுதான் இப்படிப் போடப்பட்டிருக்கிறது. இதை நஷ்ட பட்ஜெட் என்று சொல்ல முடியாது. காரைப்பற்றிப் பேசுகிறார்கள். கார் தொழிலாளிகள், கார் வைத்திருக்கிற முதலாளிகள் பெருவாரியாகச் சம்பாதித்திருக்கிறார்கள் என்று அநேகம் இடங்களில் தப்பாகப் பேசப்படுகிறது. உண்மை அப்படியில்லை. 170 மைலுக்குக் குறையாது ஓடுகிற பஸ்கள்தான் அதிகம். சாதாரணமாக என்னுடைய பஸ்ஸுக்கு வருஷத்தில் நெட் இன்கம் ரூ. 12,000 வருகிறது. இதில் இன்கம் டாக்ஸ் கட்ட வேண்டும். நான் ரொம்ப உண்மையாகக் கணக்கு எழுதுகிறவன். காலணு வித்தியாசம் சொல்லமுடியாது. நான் கொடுக்கிற கணக்கு இன்கம் டாக்ஸ்காரர்களால் அப்படியே ஒப்புக்கொள்ளப்படுகிறது. நான் என்னைப் போற்றிச் சொல்லவில்லை. சொல்லக் கூடாது. நான் என்னுடைய வாழ்க்கையில் ஒரு பியூரிடன். தப்புக்கணக்கு, பிளாக் மார்க்கெட் வைப்பதில்லை என்று சொல்லிக் கொள்கிறேன். என் கணக்கில் 14 லட்சம் கிராஸ் இன்கம் ஆக வருகிறது. பதிநான்கு லட்சம் ரூபாய் **Gross income-** -ல் தொழிலாளர்களுக்கு நல்ல போனஸ், சம்பளம் கொடுக்கிறேன் என்று சொல்வதற்கில்லை. அவர்களுக்கு 2 சட்டை கொடுக்க முடியவில்லை. 1 சட்டைதான் கொடுக்க முடிகிறது. ஏதோ சம்பளம்— **Minimum Wages Act-** -க்குக் கட்டுப்பட்டு வருஷத்துக்கு ஒரு ரூபாய்தான் **Increment** கொடுக்க முடிகிறது. நிகர லாபம் ரூ. 55,000 மிச்சம் பண்ண முடிகிறது. லட்சத்தி இருபதினயிரம் கிடைத்தால் **Income-tax** கொடுத்தது போக ரூ. 55,000 நிகர லாபம் என்று 6-20 p.m.

[திரு. எஸ். பி. கே. ஏ. லட்சுமணன் செட்டியார்] [6th July 1962

சொல்கிறேன். 7 வருஷத்திற்கு ஒரு முறை 2 வண்டி மாற்றினால் தான் நல்ல நிலையில் வைத்திருக்க முடியும். என்றால் 7 வருஷத்திற்கு ஒரு முறை 2 வண்டி மாற்ற முடியவில்லை. ஆனால் இந்தத் தொழிலுக்கு வேறு Facilities–Financial facilities இல்லை. என் நிலையில் இருக்கிறவர்களே பாங்கில் வரவு செலவு பண்ண முடியவில்லை. சாதாரணமானவர்கள் மார்வாரி Rate-ல் அல்லது Hire-purchase -ல் வாங்குகிறவர்களுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். 18 மாத தவணைக்கு ரூ. 35,000 வாங்கினால் 18% வீதம், என்ன வட்டி கொடுக்கிறார்களோ, 18-வது மாதம் ரூ. 2,000 பாக்கி இருந்தாலும் ரூ. 35,000-க்கான வட்டி கொடுக்கவேண்டும்.

இந்த முறையில் வரி போட்டிருக்கிறது. இதை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் ஒருவிதத்தில் ராமனாதபுரம், திருநெல்வேலி, மதுரை ஜில்லாக்களில் 1946-ம் வருஷம் ஒரு seat- க்கு ரூ. 17 வரி இருக்கும் காலத்தில் என்ன Rate- க்கு பஸ் ஓட்டிக்கொண்டிருந்தோமோ அதே ½ அணு ரேட்டுக்கு இன்றும் ஓடிக்கொண்டிருக்கிறது. சர்க்கார் அனுமதித்திருக்கும் 7½ பைசா இன்னும் போடவில்லை. இப்போது குறைவாக 1½ பைசா விட்டு வைத்திருக்கிறோமே அதைப் போட்டால் கொடுக்க ஆட்சேபணையில்லை. ஆனால் அதில் வந்து Sliding scale போட்டிருக்கிறதே, ஒன்றாவது Sliding scale- -ல் வண்டி இல்லை. 2-வது 3-வது Sliding scale -ல் தான் வண்டி இருக்கிறது. ரூ. 42½ average வருகிறது. Surcharge rate இப்போது ரூ. 32½. இந்த வரிக்கு மூன்று slab வைத்த மாதிரி Surcharge--க்கு மூன்று slab வைக்கவில்லை. 35 என்றால் 22½ கூடுதல். 22½ + 12½ = 35 கூடுகிறது. இப்போது 42½ ஆக உள்ளவரி 87½ ஆக வரப் போகிறது. இப்போதுள்ள வரி 6¾ கோடி ரூபாய் Madras Act- ன் கீழ் இருக்கிறது. Registration இல்லாமல் சொல்கிறேன். 87½ ரூபாய் என்னும்போது 66-2/3 சதவிகிதம் கூடுதலாக வைத்துக் கொள்ளலாம். குறைந்தது 4½ கோடி, 5 கோடி வரும். அந்த ஒரு வரியை வைத்துக்கொண்டு நில வரியை விட்டுவிடலாம். Stamp Duty கூட்டி இருக்கிறோம். நன்றாகக் கூட்ட வேண்டியதுதான். Stamp Act- படி யார் இப்போது பத்திரம் எழுதுகிறார்கள்? Evasion கணக்கு வழக்கில்லை. ரூ. 10 லட்சம் transaction- ல் ரூ. 3 லட்சத்திற்குக் கூடப் பத்திரம் எழுதுவதில்லை. Stamp evasion போல் . . .

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன்: அதனால்தான் பிடிக்கவேண்டி இருக்கிறது.

திரு. எஸ். பி. கே. ஏ. லட்சுமணன் செட்டியார்: அதனால்தான் அதைக் கவனிக்க வேண்டும். மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் செய்யவேண்டும் என்கிறவர்களுக்கு இது கஷ்டமாக இருக்கிறது. சாமார்த்தியசாலிகள் தயாரித்துக்கொள்ளுகிறார்கள்.

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன்: அப்படியெல்லாம் பண்ணினால் Land Acquisition Act- படி நிலம் வாங்கும்போது ரொம்பக் குறைந்த மதிப்பு வரும். இதைக் கனம் அங்கத்தினர்களும் பொது மக்களும் தெரிந்துகொள்ளவேண்டும்.

6th July 1962]

திரு. எஸ். பி. கே. ஏ. லட்சுமணன் செட்டியார்: புஞ்சைக்குக் கூட **double** வரி போட்டிருக்கிறது. நஞ்சைத்தரம் புஞ்சைக்கு ஆயக் கட்டிலிருந்து பாய்ச்சினுல்—சொல்லிவிட்டு பாய்ச்சினுல் ரூ. 3, சொல்லாமல் பாய்ச்சினுல் 20 **times** தண்ணீர் பாய்ச்சும் முறையைக் கொண்டு வரி போட்டால், அது பிசகுதான். நாம் பல காரியங்களை விரிவாக எல்லா தாலூகா கண்ணேட்டத்தில், ஆங்காங்கேயுள்ள மக்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பாக பல தொழில்களை நிறுவி வருகிறோம். ஆனுல் **East Ramnad** ஜில்லாவில் பிரதான ஊர் சிவகங்கை. இந்தப் பகுதியில் எந்தவிதத் தொழிலும் இதுவரை கிடையாது. அங்கேயுள்ள தொழிலாளர்கள்—வேலை தெரிந்த தொழிலாளர்கள்—நல்ல முறையில் வேலை பார்க்கக் கூடியவர்கள்— தெளிவாக புத்தி சாலித்தனமாக வேலை பார்ப்பார்கள். ஆனுல் அவர்களுக்கு வாய்ப்பு இல்லை. ஹைஸ்கூல் படித்தவுடன் மேலே படிக்கவும் வாய்ப்பு இல்லை. இந்த நிலையைத் தவிர்க்க அங்கே **Co-operative basis**-ல் ஒரு **Industrial Colony** ஒரு **Co-operative Textile Mill** இவைகள் வரவேண்டுமென்று அங்கே இருப்பவர்கள் முயற்சி செய்து அதற்கு வேண்டிய லைசென்சுக்கு **apply** பண்ணியிருக்கிருர்கள். இந்த நேரத்தில் **Co-operative Mills**-க்குக் கொடுப்பதற்கு நம் சர்க்காரில் இன்னும் சில **spindle** இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதை சிவகங்கையிலேயே வைக்கப்படும் வாய்ப்பைத் தரவேண்டுமென்று **Industries Minister**-ஐக் கேட்டுக்கொள்கிறேன்.

தொண்டி **to** மதுரைசாலை—100 வருஷத்துக்கு முந்தியே ஏற்பட்டது. பாலத்திலுள்ள **slab**-ஐப் பார்த்தால் அது 100 வருஷத்திற்கு முந்தி என்று தெரியும். அது இன்னும் **Latrite road**-ஆக இருக்கிறது. சாதாரணமாக 30 மைல் பிரயாணம் ஒரு மணி, 1½ மணி நேரத்தில்கூட **Pleasure car**-ல் போக முடியாமல் இருக்கிறது. **Planning**-ல் இந்த வருஷத்தில் வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனுல் அது வந்து இப்போது இல்லை. இதை அமைச்சரவர்கள் கவனித்து இந்த ஆண்டிலேயே கிடைக்கும்படி செய்யவேண்டும்.

இப்போது **Harijan Colonies** குறிப்பாக ராமனுதபுரம் ஜில்லாவில் கிழக்குப் பகுதியில் **Cyclone time**-ல் கட்டப் பட்டன. அதிலிருந்த மக்கள் தங்கள் வீடு என்று உணர்ந்து அவ்வளவாகப் பாதுகாத்துக் கொண்டிருக்காத நிலையில் அவை களெல்லாம் இடிபாடாகி விட்டது. இப்போது கட்டிக்கொடுக்கும் வீடுகள் ஹரிஜன மக்கள் நமக்குக் கட்டிக்கொடுக்கும் வீடு என்று உணருகிருர்கள். இப்போது இடிந்த வீட்டு சாமான்களை வைத்து, ரூ. 300 அவர்களுக்குக் கடனுகக் கொடுத்தால், அந்த வீடுகளை அவர்களே கட்டிக்கொள்வதாக பல நூற்று கணக்கான மக்கள் என்னிடத்தில் விண்ணப்பம் செய்திருக்கிருர்கள். அதைச் சம்பந்தப்பட்ட இலாகா அமைச்சரவர்கள் கவனித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. எஸ். பி. கே. ஏ. லட்சுமணன் செட்டியார்] **[6th July 1962**

இவ்வளவு நேரம் பேச வாய்ப்பு கொடுத்ததற்கும், இந்த நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்த கனம் நிதியமைச்சர் அவர்களுக்கும் எனது வந்தனத்தைச் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். **வணக்கம்.**

6-30 p.m. **திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** அக்கிராசனுதிபதி அவர்களே, இந்த விவாதத்தில் கலந்துகொண்டு என்னுடைய அபிப்பிராயத்தைச் சுருக்கமாகத் தெரிவித்துத் தாங்கள் கொடுத்துள்ள கால அளவில் என்னுடைய பேச்சை முடித்துவிட ஆசைப்படுகிறேன். ஹிந்து பத்திரிகையில் பட்ஜெட் விவாதத்தைப் பற்றியும், டில்லி பார்லிமெண்டில் பட்ஜெட் விவாதம் எப்படி நடைபெற வேண்டுமென்பது பற்றியும், அதிலும் குறிப்பாக நம்முடைய மாகாணத்தில் நம்முடைய சபையில் நாம் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று மற்ற மாகாணத்தவர் எதிர்பார்க்கிறுர்கள் என்பதைப் பற்றியும், மிகுந்த அறிவாளியும், புள்ளி விவரம் தெரிந்தவரும், **Finance Commission** தலைவருமாக இருந்தவர் கட்டுரை எழுதியிருக்கிறுர். இன்றையதினம் நான் சட்டமன்றத்திற்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில் அதைப் பார்த்தவுடனே, அந்தக் கட்டுரையை அப்படியே இங்கே வாசித்துக் காட்டிவிட்டு என்னுடைய பிரசங்கத்தை முடித்து விடலாம் என்று நினைத்தேன். ஆனுல் அதற்குக் காலம் போதாததால், வேண்டாமென்று விட்டு விட்டேன். அந்தக் கட்டுரையில் அவர் நம்முடைய சபை முன்னுல் கூட்டப்பட வேண்டுமா அல்லது கீழ் சட்ட சபை கூட்டிய பிற்பாடு கூட்டப்படவேண்டுமா என்பதைப் பற்றி அபிப்பிராயம் சொல்லியிருக்கிறுர்கள். நம்முடைய சபையில் இருப்பவர்கள் அறிவாளிகள், நம்முடைய அபிப்பிராயத்தை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களிடத்தில் இருப்பதைவிட நம் சபையில் உள்ளவர்களிடத்தில் விவாதத்தின் தன்மை சிறந்திருக்கும் . . .

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : Any reference to the other House even in a very remote way, suggesting that it is not equal to this House, is not parliamentary.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: அப்படியெல்லாம் அந்தக் கட்டுரையில் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். நாம் கௌரவமாக நடந்து கொள்ளவேண்டும் என்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த சபையில் நடந்த விவாதத்தால் வெளியில் இருப்பவர்கள் நம்முடைய சபையைப் பற்றித் தாக் குறைவாக நினைக்கின்ற சந்தர்ப்பம் வந்துவிட்டதோ என்று அஞ்சுகிறேன். ஆகவே நாம் நல்ல முறையில், தரத்தோடு சபையை நடத்துகிறேம் என்று காட்டிக் கொள்ளவேண்டுமென்று நினைக்கிறேன்.

நம்முடைய சர்க்கார் மிகுந்த ஆர்வத்துடன் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று பல வருடங்களாக முயற்சி எடுத்துக் கொண்டு, திட்டமிட்டு நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறுர்கள். அந்தக் காரியங்களுக்கு, திட்டங்களுக்குப் பணம்

6th July 1962] [திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

போதாத காரணத்தால், இந்த வருடத்தில் நம்மிடையே சில வரிகளைப் போட வேண்டுமென்று தைரியமாக முன் வந்திருக்கிறார்கள்.

பஸ்ஸிற்கு அதிக வரி போட்டிருக்கிறார்கள். என்னுடைய நண்பர் திரு. லக்ஷ்மண செட்டியார் அதைப் பற்றிக் குறிப்பிடாமல் விட்டு விடுவாரோ என்று நினைத்தேன். அதிகப்படி 7½ பைசா வரை பஸ் கட்டணம் போடலாம் என்று இருப்பதால், எனக்கு இந்த வரி உயர்வால் நஷ்டமில்லை என்றார். பஸ் சொந்தக்காரர்கள் உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தக் கூடுதலான வரியைத் தாராளமாகக் கொடுக்கலாம், கொடுக்க முடியும் என்பதுதான் என்னுடைய கருத்து. நண்பர் திரு. லக்ஷ்மண செட்டியார் இங்கே இருக்கும் போதே இதைச் சொல்லிவிட வேண்டுமென்றுதான் சொல்லுகிறேன். பஸ்ரூட் பெர்மிட் வேண்டுமென்று எங்களைப் போன்றவர்களை வந்து வாட்டி வதைக்கிறார்கள். அதற்காக வக்கீல் வீட்டிலும், ஹைக்கோர்ட்டிலும் நடையாக நடந்து, ரிட் போட்டு செலவு செய்கிற பணத்தைப் பார்க்கிறபோது, இந்த பஸ் தொழிலில் கொள்ளை லாபம் ஏற்படுவதுபோல் இருக்கிறது என்று நினைக்க வேண்டியிருக்கிறது. சில பஸ் சொந்தக்காரர்களைக் கேட்டால் இந்தக் கூடுதலான வரியைத் தாங்க முடியும் என்கிறார்கள். மைலுக்கு 7½ பைசா கட்டணம் வசூலிக்கலாம் என்று இருப்பதைக் கூட்டிக்கொண்டு போகலாம் என்று நினைக்கிறார்களோ, என்னவோ. பொதுமக்களிடத்திலிருந்து மேற்கொண்டு கட்டணத்தை உயர்த்தி இந்த வரியை வசூலிக்கக் கூடாது என்று பலர் இங்கே வற்புறுத்தினார்கள். நம்முடைய கனம் மந்திரி அவர்கள் அதை மனதில் கொண்டு மைலுக்கு 7½ பைசாதான் அதிகப்படியான (maximum) கட்டணம் என்பதை (enforce) செய்து, அதற்குள்ளாக வரியைச் செலுத்தவேண்டுமென்று நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, நிலத்தீர்வையைச் சீர்திருத்தி இருப்பது சம்பந்தமாக, திரு. அன்பழகன் அவர்கள், இந்தச் சீர்திருத்தம் பூராவும் விவசாயிகளைப் பாதிக்கக்கூடாது என்றார்கள். ரொம்ப காலத்துக்கு முன்னால், மேட்டூர் போன்ற சில பாசன வசதி இருக்கிறபோது ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்டு பிரகாரம் தீர்வை ஏற்படுத்தப்பட்டது. அப்போது நெல் விலை, அரிசி விலை தஞ்சை ஜில்லாவில் கலம் என்ன விற்றது, அப்போது என்ன நிலையில் விவசாயம் இருந்தது, இப்போது நெல், அரிசி கலம் என்ன விலை விற்கிறது, விவசாயத்தை நடத்திக்கொண்டிருக்கும் நண்பர்கள் இன்று என்ன நிலையில் இருக்கிறார்கள் என்று ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, மேட்டுப் பாங்காக இல்லாதபடி, கண்டிப்பாக, விளையக் கூடிய இடங்களில் நிலத்தீர்வையை உயர்த்துவதால் கஷ்டம் வந்துவிடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். அன்று ரூபாய்க்கு இரண்டு கலம் விற்றுக்கொண்டிருந்தது, இன்று மூட்டை 22 ரூபாய் விற்கிறது. நிலத்துக்கு வரி போடுவதா இல்லையா என்பது வேறு விஷயம். மற்ற தேசங்களில் நிலத்துக்கு வரிபோடவில்லையானால், நம்முடைய நாட்டிலும் எடுத்து விடுவதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. மற்றத் தொழி

[திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்] [6th July 1962

லுக்கு எல்லாம் வரியை அதிகரிக்கும்போது, நிலத்திலிருந்து அதிக வருமானம் வருகிற இந்த நேரத்தில், நிலவரியைச் சற்று கூடுதலாக்கினால் அதற்கு ஆட்சேபம் சொல்லுவதற்கில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். மேட்டுப் பாங்கான பிரதேசம், கரிசல் பிரதேசம், மானம்பார்த்த பிரதேசம் இவற்றில் உள்ள பூமிக்குக் கூட்டினால் அர்த்தமில்லை. நல்ல பாசன வசதியுள்ள இடத்திற்கு உயர்த்தினால், அது நியாயமானதாகும்.

அடுத்து, Low Tension, High Tension மின்சார உபயோகத்தின் மீது வரியைக் கூட்டியிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் சம்சாரி, கவலை ஓட்டி விவசாயம் செய்தால் எவ்வளவு கட்டுப்படி ஆகிறது, மின்சாரத்தை உபயோகித்து விவசாயம் செய்தால் செலவு எவ்வளவு மிச்சமாகிறது என்று பார்க்கிறபோது இந்த மின்சார வரி உயர்வு சம்சாரிகளைப் பாதிக்காது என்பது என் அபிப்பிராயம். இவைகளில் எல்லாம், ஒவ்வொரு அம்சத்திலும் என்னுடைய சொந்த அனுபவத்தை வைத்துச் சொல்லுகிறேன். கண்மூடித் தனமாகச் சொல்லவில்லை. நானும் விவசாயத்துக்காக மின்சாரம் உபயோகப்படுத்தி ரூபாய் 2,000 மின்சார வரி கட்டுகிறவன். அந்த முறையில் சொல்லுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்துக்கு நான் ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மக்களிடத்திலிருந்து வசூலிக்கிற வரிப்பணத்தை வீண் விரயமாக்காமல், கண்காணிப்போடு சிக்கனமாகச் செலவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அமைச்சர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. நாங்கள் கண்காணிப்போடு செலவழிக்கவில்லையா என்று ஆத்திரப்படக் கூடாது. நாங்கள் சொல்லுவதைச் சொல்லுகிறோம். நீங்கள் எடுத்துக்கொள்ளுகிற அளவுக்கு எடுத்துக் கொள்ளுங்கள். சொல்ல வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது, சொல்லுகிறோம்.

திரு. அன்பழகன் அவர்கள் கல்வியின் தரம் குறைந்திருப்பது பற்றியும், பள்ளிக்கூடங்களில் ஐந்தாம் வகுப்பில்கூட இடம் கிடைப்பதில்லை என்றும் தெரிவித்தார். எங்கள் ஊரில் ஏராளமான ஹைஸ்கூல்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு வகுப்பில் ஒன்பதே மாணவர்களைக் கொண்ட ஹைஸ்கூல் இருக்கிறது. ஆறாவது பாரத்தில் 15 மாணவர்களை மட்டுமே கொண்ட ஹைஸ்கூல் இருக்கிறது. நாங்கள் படிக்கிற காலத்தில் கட்டுச் சாதத்தை கட்டிக்கொண்டு, நான்கு மைல், மூன்று மைல் தொலைவில் உள்ள ஹைஸ்கூலுக்குப் போக வேண்டியிருந்தது. காமராஜ் அவர்கள் விருதுநகரிலே பிறந்தார். இன்று ஏராளமான பள்ளிக்கூடங்கள் திறக்கப்படுகின்றன. பல பள்ளிக்கூடங்கள் Uneconomic-ஆகத் தோன்றுகின்றன. 8,000 ரூபாய் கட்ட முன் வருகிற இடத்தில் எல்லாம் பள்ளிக்கூடம் திறப்பது என்பது உகந்தது அல்ல. குறைந்த ஜனத் தொகை உள்ள கிராமத்தில் எல்லாம், 8,000 ரூபாய் கட்ட முன்வருகின்றார்கள் என்பதற்காகப் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தினால், இரண்டு ஆயிரம், மூன்று ஆயிரம் மக்கள் உள்ள கிராமங்களில் இருப்பவர்கள், சிறிய

6th July 1962] [திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

கிராமங்களிலே பள்ளிக்கூடம் திறந்திருக்கும்போது எங்கள் கிராமத்தில் ஏன் திறக்கக்கூடாது என்று கேட்டார்கள். School-கள் Economic- ஆக இருக்கிறதா என்று பார்த்து திறக்கப்படவேண்டும். எங்கள் ஜில்லாவை எடுத்துக்கொண்டால், சில இடங்களில் உள்ள பள்ளிக்கூடங்களைக் குறைக்கலாம். நான் இதை நம்முடைய முதலமைச்சரிடத்திலே சொன்னேன். ரூபாய் 8,000 கொடுக்கிற இடத்திலெல்லாம் பள்ளிக்கூடம் திறப்பது என்ற முறையை ஏற்படுத்திக்கொண்டால், பல இடங்களில் தொந்திரவு செய்கிறார்கள். நண்பர் திரு. ராஜா ராமுக்குத் தெரியும். அவரைத் தொந்திரவு பண்ணியதால், ஒரு இடத்தில் பள்ளிக்கூடத்திற்கு அனுமதி வாங்கித்தர நேரிட்டிருக் கிறது. இதையெல்லாம் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயத் துறையில் முன்பு டிராக்டர்கள் வேலை செய்வது பற்றிச் சொன்னேன். ஐந்து ரூபாயாக இருந்தது இப்போது பன்னிரண்டு ரூபாயாக ஆயிற்று. பன்னிரண்டு ரூபாய் கொடுத் தும் கிடைப்பதில்லை. டிராக்டர்கள் 150 இருந்தால் அதில் 60 சிக் என்று சொல்கிறார்கள். பிளேடு அமெரிக்காவிலிருந்து வரவில்லை என்று சொல்கிறார்கள். இவற்றையெல்லாம் ஜாக்கிரதையாக இருந்து செய்யவேண்டும். மேலும் இப்போது விவசாய உற்பத் திக்காகப் பரிசு கொடுக்கிறார்கள். 8,500 பவுண்டு 9,000 பவுண்டு என்று சொல்கிறார்கள். நாங்களும் விவசாயம் செய்துகொண்டு தான் இருக்கிறோம். அவ்வளவு அதிகமாக எப்படி உற்பத்தி யாகிறது என்றுதான் தெரியவில்லை. இந்த மாதிரிக் காரியங்களை ஜாக்கிரதையாகச் செய்தால் நல்லது. டிபார்ட்மெண்டில் கவனித்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 6-40 p.m

ஏழைப் பிள்ளைகளுக்கு லோன் கொடுக்கிற விஷயத்தைப் பாராட்டுகிறேன். அது ஒரு பெரிய புகாராக இருந்தது. அவர் களுக்கு லோன் கொடுத்து வசதி செய்து கொடுத்ததற்காக சர்க் காரைப் பாராட்டுகிறேன். வரிபோட்டாலும்கூட அதை ஜாக்கிர தையாகச் செலவழித்தால் நல்லது. எதையும் விழிப்போடு செய்யும் எண்ணத்தை சர்க்கார் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. கமலக்கண்ணன் : மன்றத் தலைவர் அவர்களே, கடை சியாக எனக்குப் பேச வாய்ப்பு தந்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச ஆசைப் படுகிறேன். வெகு காலம் அனுபவம் வாய்ந்த நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கை மிகவும் பாராட்டுதலுக்குரியது. உலகத்தில் அன்னிய ஆட்சிக்கு உட்பட்டு இருந்த அடிமை நாடு களின் சரித்திரத்தை எடுத்துக்கொண்டால், விடுதலை அடைந்து சுயராஜ்யம் பெற்ற பிறகு பல ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்துத் தான் மக்கள் வாழ்க்கையை உயர்த்தும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக் கிறது. அதே போன்றுதான் இன்று நம்முடைய நாட்டிலே நாம் விடுதலை அடைந்த பிறகு இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை

வருத்து மிகச் சிறந்த முறையில் பல திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நாம் இருக்கிறோம். கல்வி, மருத்துவம், பொது சுகாதாரம், விவசாய அபிவிருத்தி, தொழில் வளர்ச்சி இவைகளில் எல்லாம் இன்று கண்கூடாகப் பார்க்கிறோம் அபிவிருத்தியடைந்திருப்பதை. நல்ல முறையில் வளர்ந்திருக்கின்றன. எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் கூட ஏதோ வெளி வேஷத்தோடு பேசுகிறார்களே தவிர, மனச் சாட்சியைத் தொட்டுப் பார்த்தால், நாடு அபிவிருத்தி அடைந்து வருகிறது என்பதை நன்றாக ஒப்புக்கொள்வார்கள். எந்த நாட்டிலும் ஏழை மக்களுடைய வாழ்க்கை உயரவேண்டுமானால், வரி விதிக்காமல், வசதியுள்ளவர்களிடத்தில் உள்ள பணத்தை வாங்காமல் நல்லது செய்ய முடியாது. ஆனால் இப்போது பஸ்களுக்கு வரி விதிக்கிற பொழுது, அதனால் பாசஞ்சர்களுக்கு டிக்கெட் விலையின் விகிதம் அதிகப்படாமல் அரசாங்கம் செய்தால் மிக நல்ல முறையில் இருக்கும் என்று நினைக்கிறேன். நம்முடைய சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால், 1950-ல் ஜனத்தொகை 8 லட்சம் 9 லட்சத்திற்கு மேல் இல்லை என்று கேள்விப்படுகிறேன். ஆனால் இன்றைக்கு ஜனத்தொகை 18 லட்சம், அதற்கு மேலாகவும் இருக்கிறது. எங்கு பார்த்தாலும் நெருக்கடியாக இருக்கிறது. போக்குவரத்து, பஸ், மற்ற கார்கள் எல்லாம் டிராப்பிக்கில் அதிகமாக இருக்கிற காரணத்தால் பல விபத்துக்கள் ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். அதைப்போன்று இந்த கொத்தவால் பஜார் ஜார்ஜ் டவுனில் இருக்கிறது. காலை வேளைகளில் வெளி இடங்களிலிருந்து லாரிகள் வந்துகொண்டிருக்கின்றன. அங்கேயும்கூட மிகவும் நெருக்கடியாக இருக்கும் ஒரு சந்தர்ப்பத்தை நாம் பார்க்கிறோம். ஆகவே, கொத்தவால் பஜார் போன்ற மார்க்கெட்டுகளை சென்னையில் நான்கைந்து இடங்களிலே ஏற்படுத்தினால் பரவலாக வியாபாரம் நடக்கும். அதன் காரணமாக ஜன நெருக்கடியைக்கூட ஓரளவுக்குப் பரவலாகச் செய்வதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படும். கிராமங்களை எடுத்துக்கொள்வோமானால், நவீன விவசாய விஞ்ஞான முறைகள் மூலம் எவ்வாறு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்பதை, பொறுக்கு விதைப் பண்ணைகள் போன்ற பல திட்டங்களை விவசாயிகளுக்குக் கிராம சகாயக்குகள் மூலம் அரசாங்கம் அறிவித்து வருகிறார்கள். கிராம மக்களுக்கு விஞ்ஞான விவசாயத்தை நல்ல முறையில் தெரிவித்து அதை வளர்ப்பதற்கு, இந்த விவசாய டிபார்ட்மென்டில் இருப்பவர்கள் கிராமங்களில் நெருங்கிய தொடர்பு கொண்டு வேலை செய்ய வேண்டும். அவ்வப்போது கிராம மக்களுக்கு இவைகள் எடுத்துக்காட்டப்பட வேண்டும். அதனால் கிராமப் பொருளாதாரம் வளரும். இவற்றை வளர்க்கத்தான் கிராமப் பஞ்சாயத்துக்கு அதிகாரங்களை கொடுத்து போதிய நிதி வசதியையும் கொடுத்திருக்கிறோம். ஆனால் கிராமங்களில் உள்ள வசதி படைத்தவர்கள் பஞ்சாயத்தின் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்ளாமல் ஒதுக்கிவிட்டால் மற்றவர்கள், உரிமையில்லாதவர்கள், நேர்மை இல்லாதவர்கள் பஞ்சாயத்தின் தலைவராகவும் வருகிறார்கள். இதனால் பஞ்சாயத்துக்களில் பல தொல்லைகள் இருக்கின்றன என்று கேள்விப்படு

கிறேன். பஞ்சாயத்தில் இருக்கின்ற அங்கத்தினர்கள் கிராமத் தலைவர்கள் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானங்களைப் பஞ்சாயத்தில் போட்டு அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கம் உடனடியாக அதை எடுத்து அவர்களுடைய கோட்பாடுகளையும் மற்றும் பல விஷயங்களையும் ஆராய வேண்டியிருக்கிற காரணத்தால், பல கிராமங்கள் நல்ல முறையில் நடப்பதாகத் தெரியவில்லை. ஆகையால், அரசாங்கம் பஞ்சாயத்துத் தலைவர்களிடத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகிற கிராமப் பஞ்சாயத்துக்களை உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ்ஸுக்கும், லாரிக்கும் வரி விதித்திருக்கிறார்கள். ஆனால் ஏழைகளாக இருக்கிறவர்களுக்கு அதோடுகூட ஒரு லாரியை வைத்துக்கொண்டு ஜீவனம் நடத்துகிறவர்களுக்கு அதிகமான வரி இல்லாமல் இருந்தால், நன்றாக இருக்குமென்று என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றப் பிரதேசங்களைவிட நம்முடைய தமிழ் நாட்டில் 2,565 மைல் சாலைகள் இருப்பதாக நான் அறிக்கையில் வாசித்தேன். உண்மையாகவே இது மிக பாராட்ட வேண்டிய விஷயம்தான். நல்லமுறையில் சில ரோடுகள் அமைந்துள்ளன. ஆனால் கிராமங்களுக்குப் போகிற இணைப்பு சாலைகள் பல மண் அளவில் இருக்கின்றன. அவைகளுக்கு மெட்டல் போடாத காரணத்தால், மழை காலங்களில் கரைந்துவிடுகின்றன. இவற்றைப் போட்டால் நல்லமுறையில் கிராம மக்களுக்குச் சௌகரியமாக இருக்குமென்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய சென்னை நகரத்தில் ஜெனரல் ஆஸ்பத்திரியை விஸ்தரிக்கும் திட்டம் இருக்கிறது. இந்த சிறைச்சாலையை எடுத்து ரெட் ஹில்ஸ் பகுதிக்கு அப்பால் கொண்டுபோகத் திட்டம் இருக்கிறது. அதை உடனடியாகச் செய்து அதோடுகூட புலியூர் கோடம்பாக்கத்தில் 30 ஏக்கரில் ஆஸ்பத்திரி கட்ட வேண்டிய திட்டம் இருக்கிறது. அதையும் உடனடியாகச் செய்தால் சென்னையில் நல்ல நிலை ஏற்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். வடக்கே இருக்கிற தொத்து நோய் ஆஸ்பத்திரி போதாது என்று அபிப்ராயப்படுகிறார்கள். கோட்டூர், அடையாரில் தொத்து நோய் ஆஸ்பத்திரி கட்டினால், நன்மையாக இருக்குமென்று கருதுகிறேன்.

மின்சாரத்தை எடுத்துக்கொண்டால், லோ டென்ஷன் பம்பு செட்டுக்கும் வீடுகளுக்கு லைட்டுகளுக்கும் வரி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஹை டென்ஷன் தொழில் காரணங்களுக்காக, தொழில்களுக்கு அதிகமாக வேண்டுமென்றாலும் வரி போடலாம். ஆனால் நடுத்தர வகுப்பினர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஆதரவு கொடுக்கிற இந்த நேரத்தில், இந்த லோ டென்ஷன் எலக்ட்ரிசிட்டிக்கு வரி இல்லாமல் இருந்தால், நன்றாக இருக்குமென்று தாழ்மையான என் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கிராம மக்களுக்கு கால் ஏக்கர் ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு விவரம் தெரியாத நிலையில் ஐந்து எச்.பி., பத்து

[திரு. கே. கமலக்கண்ணன்] [6th July 1962

எச்.பி. வேண்டுமா என்று தெரியாத நிலையில், கேட்டு வாங்கி வைத்துவிடுகிறார்கள். அவர்களுக்கு அதிகம் கரண்டு செலவாவ தில்லை. ஆனால் மாதத்திற்கு 10 ரூபாய் அல்லது மாதத்திற்கு 30, 40 கட்ட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதனால் கிராம மக்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். அதைக் கவனித்து அவர் களுக்குப் பரிகாரம் செய்யவேண்டுமென்றும், கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பஸ், லாரிகள் அதிகமாக ஆகிவிட்ட காரணத்தினால், ஆக்சிடெண்டுகள் அதிகமாக ஏற்படுகின்றன. இதற்குக் காரணம் டிரைவர்கள் வெளியூர்களிலிருந்து வருகிறார்கள். பெங்களூர் போன்ற மற்ற இடங்களிலிருந்து வருகிற டிரைவர்கள் தூக்கத்தில் எட்டு மணி நேரம் பத்து மணி நேரம் வேலை செய்வதால் அசந்து விடுகிறார்கள். மற்ற ஒரு தூக்கமும் அவர்களுக்கு வந்து விடுகிறது. அதுவும் ஆபத்தான நிலையில் இருப்பதால், எட்டு மணி பத்து மணிக்கு அவர்களுக்கு வேலை நேரத்தைக் கொடுக்கக் கூடாது. பல இடங்களில் அப்போது விபத்துக்களைத் தடுக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுகூட பொறுப் புள்ள டிரைவர்கள் அவர்களே ஓட்டாமல் கண்டக்டரிடமோ, கிளீனரிடமோ ஓட்டுவதற்குக் கொடுத்துவிடுகிறார்கள். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் வெளியூர் பஸ் ஸ்டாண்டு நகரத்தின் மத்தியில் இருக்கிறது. ஹை கோர்ட்டுக்கு அருகாமையில் இருக்கிறது. அதனால் சென்னை நகர பஸ்களும் ஓடுவதால், அங்கு அதிகமான நெருக்கடி ஏற்படுகிறது. அதனால் பல விபத்துக்கள் ஏற்படுகின் றன. ஆகையால் இதை சென்னையின் எல்லைப் புறத்தில் மாற்றி இரண்டு மூன்று பஸ் ஸ்டாண்டுகளாகச் செய்தால், நெருக்கடி யைத் தீர்க்க ஒரு சந்தர்ப்பம் ஏற்படுமென்று தெரிவித்துக்கொள்கி றேன்.

விவசாயிகளுக்குக் கூட்டுறவு இலாகாவின் மூலம் கடன் உதவி தர அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. ஆனால் நேரடியாக இந்த உதவி கிராம மக்களுக்குப் பயன்படக் கூடிய அளவில் இல்லை என்று கேள்விப்படுகிறேன். குத்தகைக்காரர்களுக்குக்கூட உணவுப் பொருள்கள் மீது தற்கால கடன் கொடுத்து அவர்களுக்கு ஒரு ஆதரவு அளித்தால் நன்மையாக இருக்குமென்று தெரிவித்துக் கொண்டு, கடைசியாக, எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

MR. CHAIRMAN : The House will now adjourn and meet again at 3 p.m. tomorrow.

The House then adjourned.

IV—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

* 160. *Notification issued with G.O. Ms. No. 2341, Industries, Labour and Co-operation (Labour), dated 24th April 1962, regarding amendment to the Madras Catering Establishments Rules,* 1959.

* 161. *Notification issued with G.O. Ms. No. 2676, Industries, Labour and Co-operation (Industries), dated 19th May 1962, regarding amendment to the Madras Small Scale and Cottage Industries Loans and Subsidy Rules,* 1959.

162. *Notification issued with G.O. Ms. No. 2306, Industries, Labour and Co-operation, dated 21st April 1962, regarding amendment to the Madras Weights and Measures (Enforcement) Rules,* 1958.

163. *Notification issued with Memorandum No.* 6165-J-3/62-3, *Revenue, dated 22nd February 1962, directing that the ryotwari settlement of Chennapalli, Chimpaltradi and Kaminaickenpalayam inam estates in Hosur taluk of Salem district shall be effected in accordance with the provisions contained in the settlement notification relating to the ryotwari settlement of the estates in the northern taluks of Salem district.*

---

* Laid on the table of the House on 5th July 1962.